உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்

e-magazine
www.aanmeegamalar.com


# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-7 இதழ்-187

பிப்ரவரி 1-16 2025



## உலகமே வியந்து பார்க்கும் அதிசயம்
## கும்பமேளாவில் படைபடையாக திரளும்

# நாக சாதுக்கள்

# 16ம் நூற்றாண்டு கலிலியோவும் 6ஆம் நூற்றாண்டு வராகமிகிரரும்





16 ஆம் நூற்றாண்டில், ஐரோப்பியர் கலிலியோ சனி கிரகத்தை கண்டுபிடித்த பிறகு... 9 கிரகங்களில் சனி கிரகமே மெதுவாக நகரும் கிரகம் என்றும், அது சூரியனை சுற்றி வர 29.5 ஆண்டுகள் ஆகின்றன என்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால்...

6 ஆம் நூற்றாண்டில் இந்தியர் வராகமிகிரர் எழுதிய சூரிய சித்தாந்த நூலில், பூமி தன் சுற்று வட்டப் பாதையில் 4,320,000 சுற்றுகள் சுற்றும்போது... சனி கிரகம் 146,564 சுற்றுகள் சுற்றுகிறது என்று எழுதியுள்ளார்.

அதாவது 4,320,000 146,564 = 29.5 சனீஸ்வரா என்பது சனைஸ்சரா என்ற சமஸ்கிருத சொல்லிலிருந்து வந்தது.

சனைஸ் என்றால் மெதுவாக சரஸி என்றால் நகர்தல் இதுவே நம் முன்னோர்களின் ஆற்றல்.



## ஏகாம்பரநாதர் ஏலவார்குழலி..!!



பார்வதி தேவி சிவபெருமானின் கண்களைமூடிக் கொண்டு அவரது தவத்தை விளையாட்டாக கலைத் தார்.

இதனால் உலகம் முழுவதும் இருளாக மாறியது மற்றும் உலகின் அனைத்து செயல்பாடுகளும் நின்றது.

மிகவும் கோபமடைந்த சிவன் பார்வதிதேவியை பூமியில் பிறந்து மீண்டும் அடையும்படி சபித்தார்.

வேகவதி ஆற்றின் அருகே உள்ள ஒரு பழமையான மாமரத்தடியில் மணலில் ஒரு லிங்கம் அமைத்து சிவபெருமானை நினைத்து பார்வதி தேவி கடும் தவம் செய்து கொண்டிருந்தாள்.

அருகில் உள்ள வேகவதி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு சிவலிங்கத்தை மூழ்கடிக்கும் அபாயம் ஏற் பட்டுள்ளது.

சிவனிடம் பக்தி கொண்ட பார்வதி தன் உயிரை விலையாகக் கொடுத்தும் லிங்கத்தைப் பாதுகாப்பதற் காகத் தழுவினாள்.

பார்வதியின் இந்த சைகை சிவபெருமானைத் தொட்டது.

அவர் நேரில் வந்து அவளை மணந்தார்.

இடம்: ஏகாம்பரேஸ்வரர் கோவில் காஞ்சிபுரம்.

e-magazine
aanmeegamalar.com

# முக்தி அடைய வேத மந்திரம் தேவை இல்லை

e-magazine
aanmeegamalar.com

ரமணமகரிஷி திருவண்ணாமலை ஆசிரமத்தில் இருந்த போது, அவரைப் பார்க்க பல வேதவிற்பன்னர்கள் வருவார்கள்.

முக்தியடைவது பற்றி பல விஷயங்களை ரமணரும் அவர்களுடன் விவாதிப்பார்கள்

அவருக்கு சேவை செய்யும் பக்தர் ஒருவர், இதையெல்லாம் பார்த்து கொண்டு இருப்பார்.

இந்த வேதவிற்பன்னர்களைப் போல பேச முடியவில்லையே, வேதத்தைப் படிக்காததால் முக்தி கிடைக்கும் வாய்ப்பு போய் விட்டதே என வருந்துவார்.

அவரது ஏக்கத்தைப் புரிந்து கொண்டார் ரமணர்.

ஒருநாள், தனக்கு அவர் பணிவிடை செய்து கொண்டிருந்த போது, இன்று சவரம் செய்து கொண்டாயா? எனக் கேட்டார்.

அவர் ஏதும் புரியாமல்,

ஆமாம் சுவாமி என்றார்.

கண்ணாடியைப் பார்த்து தானே சவரம் செய்தாய்?'' என்று திரும்பவும் கேட்டார் ரமணர்.

பக்தர் கலவரத்துடன் ஏதும் புரியாமல், ஆமாம் என்று பணிவுடன் தலையாட்டினார்.

கண்ணாடியைப் பார்த்து நீ சவரம் செய்தாய். அதாவது, நீ சவரம் செய்யும்வரை அது உனக்கு தேவைப்படுகிறது.

உன் முகத்தை அழகாக்கும் வரை அது உதவுகிறது. ஆனால், அந்தக்கண்ணாடியில் உன் முகத்தைப் பார்க்கலாமே தவிர, கண்ணாடியேஉனக்கு சவரம் செய்து விடுமா?' என்றார்

ரமணரிடம், முடியாது சுவாமி, என்றார் பக்தர்.

அதேபோல் தான் **வேதங்களும், உபநிஷதங்களும், சாஸ்திரங்களும். நீ சிரமப்படாமல், காயப்படாமல், முக்தியடைய அவை உதவும் அவ்வளவு தான். அவற்றால் உனக்கு முக்தியை வாங்கித்தர முடியாது.**



தீவிர பக்தியும், இறைவழிபாடும் மட்டுமே உனக்கு முக்தியைத் தரும்.

உன்னை இறைவனடியில் சேர்க்கும்.

அதை மட்டும் நீ செய்தால் போதும் என்றார்.

ஆகையால் நமக்கு தெரிந்த அளவில் உண்மையான அன்போடு இறைவனை வழிபடுதலும் இறைவனின் அங்கமான ஒவ்வொரு உயிருக்கும் தொண்டு செய்வதே உண்மையான பக்தி உண்மையான இறைவழிபாடு...

# கர்மவினைகள் போக்கும்

# சனிக்கிழமை பஞ்சமி வராகி வழிபாடு

சனிக்கிழமையோடு சேர்ந்து வரக்கூடிய பஞ்சமி என்பது மிகவும் சிறப்புக்குரியது. மேலும் அது தேய்பிறை பஞ்சமியாக இருந்தால் நம்முடைய கர்ம வினைகள் தேய்ந்து போகும் என்றும் கூறுவார்கள்.

பொதுவாக சனிக்கிழமை வரும் பஞ்சமி நாளில் வாராகி அம்மனை வழிபாடு செய்யும் முறையைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

இந்த வழிபாட்டை மாலை 4 மணிக்கு மேல் இரவு 12 மணிக்குள் எப்பொழுது வேண்டு மானாலும் செய்யலாம். வீட்டில் வாராகி அம்மனை வழிபாடு செய்பவர்கள் கண்டிப்பான முறையில் பஞ்சமி நாளில் ஐந்து தீபங்களை ஏற்றி வைத்து வழிபாடு செய்வார்கள், ஒரு சிலர் ஐந்து முக தீபத்தை ஏற்றுவார்கள், இன்னும் சிலரோ தேங்காய் தீபத்தை ஏற்றுவார்கள் எந்த தீபத்தை வாராகி அம்மனுக்காக ஏற்று கிறீர்களோ அந்த தீபத்தில் ஒரு சிறிய துண்டு வெல்லத்தை சேர்க்க வேண்டும்.

வாராகி அம்மனுக்கு எப்பொழுதும் போல் அபிஷேக ஆராதனைஅர்ச்சனைகள், ஏலக்காய் மாலை சாற்றுவது, விரலி மஞ்சள் மாலை சாற்றுவது, கிராம்பு மாலை சாற்றுவது என்று உங்களின் விருப்பத்திற்கு ஏற்றார் போல் செய்து கொள்ளுங்கள்.



நெய்வேத்தியமும் வாராகி அம்மனுக்கு பிடித்த நெய்வேத்தியமான சக்கரவல்லி கிழங்கு, பனங்கிழங்கு போன்ற கிழங்கு வகை கள், பானகம் போன்றவற்றை வைப்ப தோடு சனிக்கிழமையோடு வருகிற பஞ்சமி என்பதால் கூடுதலாக கருப்பு எள்ளுடன் வெல்லத்தை கலந்து வைக்க வேண்டும்.

இவ்வாறு வைத்து முடித்துவிட்டு **"ஓம் நமோ வார்தாளியை நமஹ"** என்னும் மந்திரத்தை 111 முறை உச்சரித்து கற்பூர தீப தூப ஆராதனை காட்டி வழிபாட்டை நிறைவு செய்து விடுங்கள்.

வழிபாட்டை நிறைவு செய்த பிறகு பிரசாதங்களை எடுப்போம் அல்லவா?அப் பொழுது இந்த எள் வெல்லத்தை எடுத்து எறும்பு களுக்கு தானமாக தரவேண்டும்.

இந்த முறையில் நாம் தேய்பிறை தைமாத பஞ்சமி நாளன்று வழிபாடும் பரிகாரமும் செய்தோம் என்றால் நம்முடைய கர்ம வினைகளும் கிரக தோஷங்களும் வாராஹி அம்மனின் அருளால் நீங்கும்.

முழுமனதோடு வாராகி அம்மனை யாரொருவர் வழிபாடு செய்கிறார்களோ அவர்களுக்கு வாராகி அம்மனின் அருள் பரிபூரணமாக கிடைக்கும்.

e-magazine
aanmeegamalar.com

# இராமேஸ்வரம் மட்டுமல்ல கோவையில் அருள்பாலிக்கும்

# மணல் லிங்கம்

e-magazine
aanmeegamalar.com

சிவலிங்க ரூபங்கள் ஒவ்வொரு கோவிலிலும் ஒவ்வொரு வடிவில் ஒவ்வொரு விதத்தில் காட்சியளித்தாலும், ஒருசில கோவில்களில் அருள்பாலிக்கும் மூலவர்கள் மிகச் சிறப்பு வாய்ந்தவர்களாக இருப்பர், அந்த வகையில் ராமன் மற்றும் சீதையால் உருவாக்கப்பட்ட மணலால் உருவான லிங்கத் திருமேணி இராமேஸ்வரத்தில் மட்டுமே உள்ளதாக அறியப்பட்டாலும், அக்னி பகவானால் உருவாக்கப்பட்ட மணல் லிங்கத் திருமேணியுடன் காட்சியளிக்கிறது காலகாலேஸ்வரர் ஆலயம்.



கோவையிலிருந்து சுமார் 19 கி.மீ தொலைவில், கோவில்பாளையத்தில் அமைந்திருக்கிறது காலகாலேஸ்வரர் ஆலயம். காலன் வழிபட்ட சிவலிங்கம் என்ற புகழினை உடையது இத்தல மூலவர்.

இந்த ஆலயத்தில் மூலவர் மணலும் நுரையும் கலந்த லிங்க வடிவில் அருளுகிறார். பொதுவாக மணலால் ஆன லிங்கம் காலத்தில் நிலைத்து நிற்பது என்பது அபூர்வம். ஆனால் இத்தல இறைவன் சுமார் 1300 ஆண்டுகளாக நிலைத்து நிற்கும் பேறுபெற்றவர் என்பது நம்பிக்கை.


மிருகண்டு முனிவருக்கும் மருத்துவ வதிக்கும் திருமணம் ஆகி நீண்ட நாள்கள் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லை என்ற ஏக்கம் இருந்தது.

எனவே அவர்கள் குழந்தை பாக்கியம் வேண்டி சிவபெருமானை மனதார வழிபட, அத்தம்பதியினருக்கு அழகான ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந் தைக்கு 'மார்கண்டேயன்' எனப் பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

மார்க்கண்டேயன் சிவபெருமான் மீது தீவிர பக்தி கொண்டு ஒழுகினான். மார்கண்டேயனின் 16 வயதிலேயே ஆயுள் முடிய வேண்டும் என்று விதி இருந்தது.

ஆயுள் முடியும் நாளில் யமதர்மனின் தூதுவர்கள் அவனது உயிரை எடுக்க வந்தனர். மார்க்கண்டேயன் திருக்கடையூர் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் ஈஸ்வரரை இறுகப் பற்றிக் கொண்டு சரணாகதி அடைந்தான்.

இதனால் கோபமடைந்த யமன் பாசக்கயிறை சுழற்றி வீச, அக் கயிறு ஈஸ்வரன் மீது விழுந்தது. இதனால் கோபம் கொண்ட சிவபெருமான்,







யமனை சூலத்தால் குத்தி இடது காலால் எட்டி உதைத்து சம்ஹாரமூர்த்தியாகக் காட்சியளித்தார்.

மேலும், யமன் யமலோகப் பதவி பறிக்கப்பட்டு மானிடனாக பூலோகத்தில் உலாவினார். மீண்டும் யம பதவி வேண்டி கௌசிகாபுரி தலம் சென்று (தற்போதய கோவில்பாளையம்) அங்குள்ள நதியில் நீராடி சிவபூஜை செய்ய எண்ணினான்.

சிவபூஜை செய்ய லிங்கம், விபூதி, வில்வம், ருத்ராட்சம் என ஏதும் கிடைக்கவில்லை. எனவே, செய்வதறியாது அங்கு கிடந்த குச்சியை எடுத்து மண் குவிந்த இடத்தில் குத்தினான்.


அதன் உள்ளிருந்து நுரை பொங்கி வந்தது. மணலுடன் நுரையைச் சேர்த்து அழகிய சிவலிங்கம் வடித்துப் பூஜை செய்தான். பரம்பொருள் யமனின் முன்பு தோன்றி, சாப விமோசனம் அளித்து மீண்டும் யமபதவி வழங்கி அனுக்கிரக மூர்த்தியாக அருளினார்.

இதனால் யமதர்மன் மகிழ்ந்து யமலோகம் நோக்கிச் சென்றான். யமன் வழிபாடு செய்த மணலும் நுரையும் சேர்ந்த சிவலிங்கமே காலகாலேஸ்வரர் என்கிறது தலவரலாறு.

கரிகாலச்சோழன் தன்னை வருத்திய பிணி நீங்குதற் பொருட்டு, கொங்கு நாட்டில் பல சிவாலயங்கள் எழுப்பினான் என்பது வரலாறு. அவ்வகையில், காலகாலேஸ்வரருக்கு சிவாலயம் எழுப்பி வழிபட்டான்.

யமனுக்கு அருள் செய்த தலம் என்பதால் இத்திருத்தலத்தில் ஆயுள் ஹோமம், உக்கிரஹர சாந்தி, சஷ்டியப்தபூர்த்தி, பீமரதசாந்தி, சதாபிஷேகம், கனகாபிஷேகம் பூர்ணாபிஷேகம் போன்ற ஹோமங்கள் செய்வது சிறப்பு.

# பெண்களை அழகாக்க உதவும் மந்திரம்



பெண்கள் தங்களை அழகாக்கிக் கொள்ள பல்வேறு வகையில் முயல்கின்றனர், ஒருபக்கம் புதிய புதிய கெமிக்கல் கீரிம்கள், சோப்பு மற்றும் ஏனைய அழகுசாதனங்களை பயன்படுத்தி அழகாக்கிக் கொள்ள முற்படுகின்றனர்.

ஆனால் இந்த கெமிக்கல் கலந்த கீரிம்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின், பெண்களின் இயற்கை முக அழகையே விகாரமாக்கிவிடுகிறது.

அந்த வகையில் எந்த க்ரீம்களையும் பூசாமல் பெண்கள் ஒரு மந்திரத்தை தொடர்ந்து கூறிவந்தால் முக அழகு கூடும் என்று இதிகாசங்கள் கூறுகின்றன.

**‘ஓம் ஶ்ரீ முகி ஶ்ரீ முகி, ஜெய ஜெய!’**

என்ற இந்த மந்திரத்தை 11 முறை சொல்லுங்கள். தினமும் இந்த மந்திரத்தை சொல்லச் சொல்ல உங்களுடையமுகத்தில் வரும் வசீகரத்தை நீங்களே உணர்வீர்கள். 48 நாட்களில் நிச்சயம் இந்த வித்தியாசம் தெரியும்.







# காணிக்கையாக காலணி ஏற்கும் அய்யனார்

e-magazine
aanmeegamalar.com

கடவுளுக்குக் காணிக்கையாக முடி, பணம், நகை பொருள்கள் அளிப்பதைப் பார்த்திருப்போம். ஆனால், காலணியை காணிக்கையாக அளிக்கும் விநோதப் பழக்கம் திட்டக்குடி அடுத்து கொற்கை அய்யனார் கோயிலில் உள்ளது.

மக்கள் தனது குடும்பக் கஷ்டம், கடன் பிரச்னை, கல்வி, வேலைவாய்ப்பு, திருமணத் தடை, குழந்தை பாக்கியம் என எதை எடுத்தாலும் கடவுளிடம் வேண்டிக்கொண்டு அதைக் காணிக்கையாக நிறைவேற்றுவது வழக்கம். காணிக்கைகள் பல விதம். அது முடிகாணிக்கை, நகை, பணம், பொருள்கள் எனப் பல விதங்களில் செலுத்துவது வழக்கம். ஆனால், கடலூர் மாவட்டம் திட்டக்குடி அருகே உள்ள கொற்கை அய்யனார் கோயிலில் காலணியை கடவுளுக்குச் செலுத்தும் விநோதப் பழக்கம் பக்தர்களிடம் உள்ளது.

இது குறித்து பக்தர்களிடம் கூறும்போது, ``அய்யனார் கோயிலில் காவல் தெய்வமாக கருப்புசாமி உள்ளார். இப்பகுதியில் காடுகள் உள்ளதால் காட்டில் உள்ள விலங்குகளால் விளை நிலங்களில் விளையும் பயிர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமல் பாதுகாக்க வேண்டி கருப்புசாமிக்கு சால்வை காணிக்கையாக அளிப்போம்.

அதேபோல் கால்களில் வலி, ஏதேனும் குறைபாடு ஏற்பட்டால் அது நீங்க இங்கு வந்து கருப்புசாமியை வேண்டிக்கொண்டு புதிய காலணியைக் காணிக்கையாகச் செலுத்துவோம். அப்படிச் செய்யும்போது எங்களின் குறைகள் நீங்கும் என்பது நம்பிக்கை.''

கொற்கை அய்யனார் கோயிலில் வெளி பிராகாரத்தில் உள்ள கருப்புசாமிக்கு அருகில் உள்ள மரத்தில் காலணி காணிக்கையைப் பக்தர்கள் செலுத்தி வருகின்றனர்.

# சிவபுண்ணியம்

## 10 வழிமுறை கடைபிடித்தால் 10 புண்ணியத்தை சிவன் தருவார்

சிவஞானம் பெற விரும்பினால் முதலில் கீழ்கண்ட 10 வழிமுறைகளை கடைபிடிக்கவேண்டும்.

- புத்தி பூர்வம்,
- அபுத்தி பூர்வம்,
- உபாயச் சரியை,
- உபாயக்கிரியை,
- உபாயயோகம்,
- உபாயஞானம்,
- உண்மைச்சரியை,
- உண்மைக் கிரியை,
- உண்மையோகம்,
- உண்மைஞானம்

இந்த பத்து வழிமுறைகளைக் கடைபிடித்தால் சிவபெருமான் ஞானாசாரியனாக எழுந்தருளி உண்மை ஞானமென்கிற சிவ புண்ணியத்தைக் கொடுப்பர்.

அது 10விதமாக இருக்கும்.

- தத்துவரூபம்,
- தத்துவதரிசனம்,
- தத்துவசுத்தி,
- ஆத்மரூபம்,
- ஆத்மதரிசனம்,
- ஆத்மசுத்தி,
- சிவரூபம்,
- சிவதரிசனம்,
- சிவயோகம்,
- சிவபோகம்

மேற்கண்ட இந்த ஞானம் பெற்றால் ஒரு மனிதன் ஞானமென்ற சிவபுண்ணி யத்தை அடைந்தவனாவான்.

– உயிரட்டவணை என வழங்கும் பூப்பிள்ளை அட்டவணை என்னும் நூலில் நூலாசிரியர் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாச்சாரிய சுவாமிகள்.



e-magazine
aanmeegamalar.com

# உலக வாழ்க்கையை சலனமின்றி கழிக்க

# சரணாகதி வழி காட்டும்

மனிதர்களாக பிறப்பதற்கே பெரும் பாக்கியம் செய்திருக்கவேண்டும் என்று இதிகாசம் முதல் புராணங்கள்வரை கூறினாலும், மனித வாழ்க்கையை வாழ்ந்து பார்க்கும்போதுதான் அதில் உள்ள சிக்கல்கள் அறிந்த பின்புதான் "என்னடா வாழ்க்கை" என்று புலம்பத் தோன்றுகிறது.

இருப்பவன் முதல், இல்லாதவன் வரை அனைவருக்கும் ஒவ்வொரு விதத்தில் ஒவ்வொரு பிரச்சனைகளை சுமந்துக் கொண்டு கழுதையைப் போன்று வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறோமே என்ற கவலை இருந்தாலும், அந்த கவலையை போக்கும் வழிமுறைகளையும் நமது இதிகாச புராணங்கள் தெளிவாக, பல்வேறு வகையில் கூறியுள்ளதை மறுக்க முடியாது.

ஆயிரத்திற்கு ஆசைபட்டு, லட்சத்தில் தொடங்கி, கோடியில் புரண்டாலும், அதற்கடுத்து உள்ள இலக்கங்களையே மனம் நாடும், இது மனித மனதின் இயல்பு.

ஆன்மிகமலர் .காம்

அப்படி அடுத்த அடுத்த இலக்கத்தை அடைந்தாலும், அதை பாதுகாக்கவும், அதைப் பெருக்கவும் மட்டுமே நம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து, அவற்றை பெருக்கியும், பாதுகாத்தும் எத்தனை காலம் நம்மால் வாழ்ந்திட முடியும்.

முடி நறைத்து, உடல் இரத்த ஓட்டம் சுருங்கும்போது, இதுவரை வாழ்ந்த வாழ்க்கை கசக்கும், வேறு வழியின்றி பிண்டமாக வாழ்ந்து முடித்து இறந்தவர்கள் வரலாறு கோடிக்கணக்கில் நம் கண் முன்னால் தெரிந்தாலும் மனம் ஏனோ பணம், நகை, மற்றும் மனையின் மீது மட்டுமே மட்டுமே நாடுகிறது.

இதிலிருந்து எளிமையாக விடுதலை பெற நமது புராணங்கள் பல்வேறு கதைகள் கூறினாலும், எளிதாக ஒரு கதை மகாபாரதத்தில் உள்ளது.

அது இறைவனிடம் பூரண சரணாகதி அடைந்தால் நம் வாழ்க்கையை அவன் பூர்த்தி செய்து தருவான் என்ற உயர்ந்த தத்து வத்தை எளிதாக சொல்கிறது.



ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்



மகாபாரத யுத்தத்தின் போது, ஜயத்ரதன் என்பவனை, சூரிய அஸ்தமனத்துக்குள் கொன்று விடுவேன் அல்லது தீக்குளிப்பேன் என சபதம் செய்தான் அர்ஜுனன்.

அன்று காலையிலிருந்தே மறைவாகவே இருந் தான் ஜயத்ரதன்.

துரியோதனன், கர்ணன் போன்றோர் அவனுக்கு பாதுகாவலாக இருந்தனர். அர்ஜுனனால் அவனை நெருங்கவும் முடியவில்லை.

அவனிருக்கும் இடமும் தெரியவில்லை.

மாலை நேரமும் நெருங்கியது.

"என்ன கிருஷ்ணா... சூரியன் அஸ்தமிக்கும் நேரமாகிறதே.!... ஜயத்ரதனை எப்படிக் கொல்வது," என்றான் அர்ஜுனன்.

சக்ராயுதத்தால் சூரியனை மறைத்தார், பக வான். இருள் சூழ ஆரம்பித்தது. இதைப் பார்த்த ஜயத்ரதன் குதூகலித்தான்.

"சூரியன் அஸ்தமித்து விட்டான். இனி அர்ஜு னன் தீக்குளித்து விடுவான்" என்ற எண்ணத்தில் தலையை வெளியே நீட்டினான்.

உடன் அர்ஜுனனைப் பார்த்து,

"அதோ ஜயத்ரதன் தலை தெரிகிறது. ஒரே அம்பால் அவன் தலையைக் கொய்து, தலை கீழே விழாமல், அருகில் சமந்த பஞ்சகத்திலுள்ள விருத் தட்சரன் என்பவருடைய மடியில் தள்ளு." என்றார் கிருஷ்ணர்.

ஜயத்ரதனுடைய தகப்பனார் தான் விருத்தட் சரன். தனது கோரமான தவப்பயனால், ஜயத்ர தனைப் பெற்றார்.

அவன் பிறக்கும் போது ஒரு அசரீரி ஒலித்தது.. "உன் புத்திரன் மகாவீரனாக எல்லோராலும் கொண்டாடப் படுவான். மிக்க கோபமும், பராக்ரமும் உள்ள வீரன் ஒருவனால், அவன் தலை அறுபட்டு மாள்வான்" என்றது.

இதைக்கேட்ட விருத்தட்சரன், தன் தவவலிமை யால் "யுத்தகளத்தில் எவன் தன் பிள் ளையின் தலையை கீழே தள்ளுகிறானோ, அவன் தலை நூறு சுக்கலாகி வெடிக்கும்" எனறு சாபமிட்டிருந் தான்.

இந்த விபரத்தை அர்ஜுனனுக்கு சொல்லி" உன்னால் அறுபட்டு இந்தத்தலை கீழே விழுந்தால், உன் தலை வெடித்து விடும். அதனால் அருகிலுள்ள அவன் தகப்பனார் விருத்தட்சரன் மடியில் அந்தத் தலையைத் தள்ளு ," என்றார் கிருஷ்ணன்.

அர்ஜுனனும் அப்படியே செய்தான். அந்த சமயம் விருத்தட்சரன் பூமியில் அமர்ந்து சந்தியோபாசனம் செய்து கொண்டிருந்தார், மடியில் தலை விழுந்ததை கவனிக்கவில்லை.

பிறகு அர்க்யம் கொடுப்பதற்காக எழுந்த போது, அவரது மடியில் ஏதோ கனமாக இருப்பதைக் கண்டு கீழே தள்ளி னார்.

அது பூமியில் விழுந்தது. தன் மகன் தலையைக் கீழே தள்ளுபவனின் தலை நூறு சுக்கலாகி வெடிக்கும் என்ற சாபத்தால், விருத்தட்சரனின் தலை வெடித்துச் சிதறியது.

நாம் என்னதான் சூழ்ச்சி செய்தாலும், சாமர்த்தியமாக நடந்து கொண்டாலும், அதைத் தீர்மானம் செய்வதும், நடத்தி வைப்பதும் பகவான் தான்.

அதனால் எல்லாப் பொறுப்புகளையும், பகவானிடம் ஒப்புவித்து விட்டு, "பகவானே.! உன் சித்தம்.! எது நல்லதோ, அதைச் செய் என்று சொல்லி, அவனைச் சரணடைந்தால் போதும். நம்மைக் காப்பாற்ற வேண்டியது அவன் கடமை. அவன் செய்வான்...

மாடிவீட்டில் பஞ்சு மெத்தையில் படுத்து உறங்கினாலும், தெருவோரத்தில் வெட்டாந்தரையில் படுத்து உறங்கினாலும் இறைவன் நினைத்தால் மட்டுமே நமக்கு உறக்கம் கிடைக்கும்.




## கும்பமேளாவில் படைபடையாக திரளும்

# நாக சாதுக்கள்

## உலகமே வியந்து பார்க்கும் அதிசயம்

கும்பமேளா நிகழ்வின் நாயகர்களா இருப்பவர்கள் அகோரிகள் என்ற நாகா சாதுக்கள்.

இந்த நாகா சாதுக்கள் இந்தியாவின் மர்மமான போர்வீரசந்நியாசிகள், என்று கூறப்படுகிறது. இவர்களே மகா கும்பமேளாவின் மையமாக உள்ளனர். அவர்கள் யார், அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள், திருவிழா முடிந்து எங்கு செல்கிறார்கள்? என்பது இன்றளவும் மர்மமே

1664 ஆம் ஆண்டு காசி விஸ்வநாதர் கோ யிலை அவுரங்கசீப் தாக்க துணிந்தபோது, இந்த நாக சாதுக்களை கண்டதும் அவுரங்கசீப் நடுநடுங்கிப் போனான்.

1669 ஆம் ஆண்டு காசி ஜோதிர்லிங்கத்தை பாதுகாக்க 40,000 க்கும் மேற்பட்ட நாக சாதுக்கள் தங்கள் உயிரை தியாகம் செய்தனர்.

1757 மார்ச் 15 யமுனை நதியை கடக்கிறான் அகமது ஷா அப்தாலி. கோகுலத்தை சூறையாட வருகிறான் அவன்.

அகமது ஷா அப்தாலிக்கு எதிரான போரை நாம் மறந்து விடலாமா? வாள், திரிசூலம்,

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்



முடியவில்லை. ஏன் தெரியுமா?

எல்லாவற்றையும் துறந்தவர்கள் இறைவனின் திருநாமம் ஒன்றே சாட்சி என வாழ்பவர்கள் நாக சாதுக்கள் தங்களை முழுமையாக வெளிப்படுத்திக் கொண்டதால்!

நாக சாதுக்கள் ஆடையின்றி நவீனகாலத் தில் எந்த தேவைகளும் இன்றி புனிதர்களாக வாழ்கி றார்கள் என்பது இந்த பாரத பூமியை காப்பதற்கும் ஆசீர்வாதங்களை வழங்குவதற்கும்தான்

ஆன்மிக ஞானம் பெறுவதற்காக எல்லாவற் றையும் விட்டுவிட்டு ஆன்மிக வாழ்க்கையைத் தொடங்கிய துறவிகள் அவர்கள்.

நாக சாதுக்கள் கோவில்களின் பாதுகாவலர்கள், மகா கும்பங்களில் சாரை சாரையாக கலந்து கொள்வதை இன்றும் நம்மால் பார்க்க முடிகிறது. இந்து மதத்திற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப் பணிக்கும் மனிதர்கள்.

நாக சாதுக்கள் மந்திரங்கள் (கோயில்கள்) மற்றும் கணிதம் (கணிதம்) ஆகியவற்றைப் பாதுகாக்க தல்வார்கள், திரிசூலங்கள், கடாக்கள், தீர் தனுஷ் மற்றும் ஆயுதத் திறன்களைக் கொண்டிருந்தனர். நாகா சாதுக்கள் படையெடுப்பாளர்கள் மற்றும் முகலாயர்களிடமிருந்து சிவ மந்திரங்களை வெற்றிகரமாக பாதுகாத்தனர்.

இந்த மகா கும்பமேளா விழாவை உலகத்தின் அனைத்து தரப்பினரும் மிக மிரட்சியுடன் பிரமித்து பார்க்கிறர்கள்... இந்த அகோரிகள் யார்... படை திரண்டு லட்சக்கணக்கில் வருகிறார்கள்.... எங்கே இருந்தார்கள்... 12 வருடத்துக்கு ஒரு முறை தீர்த்தம் ஆட வரும் இவர்களை பற்றி தான் தற்போது உலக மீடியாக்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றனர்.

சூலாயுதம், அம்பு வில் ஏந்தி அவனை எதிர்த்து போரிட்டவர்கள் நாக சாதுக்கள்.


பல்லப்கார்ஹ்க் வீழ்ந்தது. அகமது ஷா ஆப்தாலி ஜஹான் கானை, அவனது படையை மெதுவாக பின் தொடர்ந்தான். கோகுலத்தை சூறையாட பேராசையுடன் வந்தான்.

பைராகிகள் என்ற நாகசாதுக்கள் 4000 பேர் இருந்திருக்கலாம். அது நாக சாதுக்கள் ஆப்கனியரை எதிர்த்த புனிதமான போர்.

வலிமையான ஆப்கானியர்கள் இனி போரிட முடியாது என்று புறமுதுகிட்டு ஓட வைத்தது இந்த நாக சாதுக்கள் தான்! 10,000 ஆப்கன் வீரர்கள் இருந்திருப்பார்கள்!

காபூலிலிருந்து கிளம்பி மதுரா வரை எல்லா இடங்களிலும் அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. ஆனால் கோகுலத்தை சூறையாட அவர்களால்






# Aanmeega Malar

## English magazine

**covering all spiritual information**

For more details
9444228203
(9 AM to 4 PM)

**Those who want to send spiritual messages please send them along with their photo and phone number**

**Read on to find out amazing spiritual information**

# சனி தாக்கத்தை விரட்டும் கருப்பு நிற உடை

யார் ஒருவர் சபரிமலைக்கு கருப்பு நிற உடை உடுத்தி சென்று ஸ்ரீ தர்ம சாஸ்தாவினைக் காண் கிறார்களோ அவர்களுக்கு சனியின் பாதிப்பு ஏதும் அறவே இருக்காது.

கருப்பும் உடுத்து பம்பையில் முங்கி சபரிக்கு போம் ஐயப்பன்மார் என்கிற பாடலின் வாயிலாக ஐயன் ஐயப்பனுக்கு ஏற்ற, பிடித்தமான உடை கருப்பு என்பதை அறியலாம். பல்லாயிரக் கணக்கான அன்பர்கள் கருப்பு வேஷ்டி துண்டு அணிந்து தான் மலைக்கு வருகின்றனர்.

அதிலும் குறிப்பாக ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலிருந்து வருவோர் கருப்பு நிற ஆடை மட்டும் அணிகின்றனர்.

இதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஐயப்பஸ்வாமியின் பரிவார தேவதையான ஸ்ரீ கருப்பஸ்வாமி ஸ்ரீ கருப்பாயி தேவி கருமை நிற ஆடை அணிபவர்கள். அவர்களின் வழி பின்பற்றி ஐயப்ப சாமிகளிடம் கருநிற ஆடை அணிகின்றனர்.



அடுத்து சபரிமலையில் யானைகள் அதிகம் உள்ளன. காட்டு யானைகள் பெருவழியில் அதிகம் நடமாடும். அவை வெள்ளை நிறம் கண்டால் சினம் கொண்டு பிளிரும். கருப்பு நிறம் கண்டால் வெகுண்டு எழாது. மற்றும் வன தேவதைகளை சாந்தி செய்யவும் கருப்பு உடுத்து வது வழக்கமாக உள்ளது.

மேலும் கருப்பு நிறம் சனீஸ்வர பகவானுக்கு ஏற்றது. யார் ஒருவர் சபரிமலைக்கு கருப்பு நிற உடை உடுத்தி சென்று ஸ்ரீ தர்ம சாஸ்தாவினைக் காண்கிறார்களோ அவர்களுக்கு சனியின் பாதிப்பு ஏதும் அறவே இருக்காது.

ஏன் என்றால் சனீஸ்வரன் ஸ்ரீ தர்ம சாஸ்தாவின் பரம அனுக்கிரகம் பெற்றவன்.

இது தொடர்பாக கூறப்படும் கதை வருமாறு: இந்த உலகையும் மற்ற எல்லா கிரகங்களையும் தன் கிரணங்களால் அனுகுகின்றவன் சூரிய பகவான். அவருக்கு உஷா என்ற மனைவி உண்டு. இந்த உஷா விஸ்வகர்மாவின் மகள் ஆவாள். இந்த விஸ்வகர்மா தான் தேவலோகத்து தேவர்களின் ஆணைப்படி பல கட்டிடங்களையும்,சிற்ப வேலைப்பாடுகளையும் செய்பவர். தேவலோக சிற்பி ஆவார். இன்றும் விஸ்வகர்மா வகுப்பினர் தங்கம், வெள்ளி ஆபரணங்கள் செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருவதை காணலாம். சூரியன் உஷா தம்பதியினருக்கு மூன்று குழந்தைகள். 2 பேர்ஆண்கள். ஒரு மகள். 1. வைவஸ்வத மனு மகன், 2. யமதர்ம ராஜன் மகன், 3. யமுனா தேவி என்ற மகள். எனவே தான் யமுனா நதி கருப்பாக உள்ளது. (யமதர்ம ராஜனின் சகோதரி என்பதால்). சூரியனின் வெப்பத்தை அவரது மனைவியான உஷா தேவியால் கூட தாங்க இயலவில்லை.

இங்கு உஷா தேவியினை மக்களாக வும் கருதி சிந்திக்க வேண்டும். வெயிலின் அருமை நிழலில் தெரியும் என்பார்கள் எனவே உஷா தேவி தன் நிழலை உருவாக்கி சாயா தேவி என்று மாறினாள்.

e-magazine
aanmeegamalar.com

சாயா என்றால் நிழல் என்றும் பொருள் வரும். சூரியனை விட்டுவிட்டு விஸ்வகர்மாவாகிய தன் தந்தையிடம் உஷா சென்று விட்டாள். இந்த சூரியன் மனைவியாகிய சாயாதேவி தன் கணவரிடமும், உஷா தேவியின் குழந்தைகளிடமும் பிரியமாக நடந்து கொண்டாள். நாளடைவில் இந்த சாயா தேவிக்கும் மூன்று குழந்தைகள் பிறந்தன.



1.சாவர்ணி மனு மகன், 2. ச்ருத கர்மா மகன் மற்றுத் பத்ரை என்ற மகளும் பிறந்தனர். தனக்கு குழந்தைகள் பிறந்ததும் சாயா தேவி உஷா தேவியின் குழந்தைகளை வெறுக்க தொடங்கினாள்.

குழந்தைகளிடம் கடுமையாகவும் நடந்து கொண்டாள். இதனால் எமதர்மன் மிகவும் துன்பத்திற்கு ஆளானான். ஒரு சமயம் எமதர்மன் காலை தூக்குவதை கண்ட சாயா தேவி தன்னைத்தான் உதைக்க வருவதாக எண்ணி அவன் கால் எழுகக்கடவது என சாபமிட்டாள். தாய் சாபமிடு வதை கண்ட எமன் சந்தேகமுற்றான். நல்ல தாய் தன் மகனை ஒருக்காலும் சபிக்கமாட்டாள்.

தன் சந்தேகத்தினை சூரிய பகவானான தந்தையிடம் கூறினான். சினம் கொண்ட சூரியன் உண்மையினை கூறும்படி கட்டளையிட்டார். சாயா தேவியும் தான் உஷா தேவி அல்ல என்ற உண்மையினை ஒத்துக்கொண்டாள்.

சூரிய பகவானும் எமதர்ம ராஜனை பூலோகம் சென்று தாயின் நோய் தீர்க்கும் தயாவான தத்துவனாகிய ஸ்ரீ தர்ம சாஸ்தாவினை நோக்கி தவம் செய்து சாப விமோசனம் பெற வழிகாட்டினார். தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்பதனை உணர்ந்த எமன் பூலோகம் வந்து தவம் இருந்து வேண்டினார். அவனது தவ வலிமையினைக் கண்டு உள்ளம் மகிழ்ந்து ஸ்ரீ தர்ம சாஸ்தா அவன் முன் தோன்றினார். சாப விமோசனம் தந்து எமலோகத்திற்கு அதிபதியாக்கினார்.

இப்படிப்பட்ட உயர்ந்த நிலையினை ஸ்ரீ தர்ம சாஸ்தாவின் அனுகிரகத்தினால் எமன் கிடைக்கப்பெற்றதனை அறிந்த ஸ்ரீ சாயா தேவியின் இளைய மகனாகிய ச்ருத கர்மா தானும் பூலோகம் வந்து ஸ்ரீ தர்ம சாஸ்தாவை காலையும் மாலையும் பூஜை செய்து வழிபட்டான்.

பின்னர் கடும் தவம் மேற்கொண்டு சகல வரங்களையும் அருளும் ஸ்ரீ தர்ம சாஸ்தாவினையே தியானம் செய்து வந்தான்.

அவனது அன்பு கலந்த பக்தியினால் மகிழ்ந்த ஸ்ரீ தர்ம சாஸ்தா அவன் முன் தோன்றி அவனுக்கு சூரிய மண்டலத்தில் கிரக நிலையினை அருளினார். அவன் மெதுவாக நகர்வதால் (அவன் சூரியனைச் சுற்றிவர 30 ஆண்டுகள் ஆகும்) சனீஸ்வரன் என்ற பெயரும் சூட்டினார். வாரத்தின் கடைசி நாளையும் அவன் பெயரில் அழைக்க அருள்பாலித்தருளினார்.

மேலும் அந்த சனிக்கிழமையினையே தனக்கு உகந்த நாளாக ஏற்று ஐயப்பன் அருள் செய்தார். இதற்கு பிரிதி உபகாரமாக சனிபகவானும் யார் ஒருவர் கருப்பு நிற உடை உடுத்தி சனிக்கிழமை தோரும் விரதம் இருந்து சபரிமலை வந்து ஸ்ரீ தர்ம சாஸ்தா சொரூபமாகிய ஐயப்பனை அன்புடன் வேண்டுகிறார்களோ அவர்களை கஷ்டங்களுக்கு உள்ளாக்க மாட்டேன் என கூறினார்.



எனவே தான் சபரிமலைக்கு கருப்பு நிற உடை அணிந்து வரும் பக்தர்களுக்கு 7½ சனியின் தாக்கம் கடுமையாக இருப்பதில்லை.

– எம் அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி, செல்: 9750333265

# காசியில் வழிபடவேண்டிய முக்கிய சிவன் கோவில்கள்

e-magazine
aanmeegamalar.com



## ஆத்ம வீரேஸ்வரர்

காசி காண்டம், அத்தியாயம் 82 இன் படி, சிவபெருமான் வீரேஸ்வரர் லிங்கத்தின் சக்தியை பின்வருமாறு விவரித்தார்: ஒரு சமயம் ஒரு ராஜ்ஜியத்தை அமித்ரஜித் என்ற மிகவும் ஆன்மீக எண்ணம் கொண்ட ஆட்சியாளர் ஆட்சி செய்தார். அவர் ஒரு தீவிர விஷ்ணு பக்தராக இருந்தார். மேலும் அவர் தனது ராஜ்யத்தின் அனைத்து குடிமக்களும் விஷ்ணுவின் பக்தர்களாக மாற வேண்டும் என்று விதி செய்தார். ஒரு நாள் நாரத ரிஷி அவரது அரண்மனைக்கு வருகை தந்தார். மன்னரால் உரிய மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.



ஆன்மிக பூமி காசியின் புனிதமும் வரலாறும்

நாரத ரிஷியின் வழிகாட்டுதலின்படி, மன்னன் அமித்ரஜித் ஒரு தீயவரின் பிடியில் இருந்து மலையகந்தினி என்ற அழகான பெண்ணைக் காப்பாற்றினார்.

மன்னன் பின்னர் அவளை மணந்தார். அவர்கள் காசிக்கு வந்து, அழகான சுற்றுப்புறங்களால் உடனடியாக மகிழ்ச்சி யடைந்தனர். சரியான நேரத்தில், மலையகந் தினிக்கு அழகான ஆண் குழந்தை பாக்கியம் கிடைத்தது.

விதியின் படி, அந்த குழந்தை பிறந்த உடனேயே 16 வயது ஆக வேண்டும். இருப்பினும், அந்த பாலகன் ஒரு அசுப கிரக சேர்க்கையில் பிறந்ததால், மன்னரின் அமைச்சர்கள் ராணியிடம் குழந்தையை பலி கொடுக்க வேண்டும். இல்லையெனில் மன்னர் இறந்துவிடுவார் என்று கூறினார்.

மன்னனைக் காப்பாற்றுவதற்காக. குழந்தையை விகட தேவியிடம் அனுப்பினாள், ராணி. ஆனால் அதற்குள் 16 வயது நிரம்பிய அந்த அழகிய சிறுவனைக் கொல்ல யாரும் முன்வரவில்லை. சிறுவன் சிவபெருமானிடம் கடுமையான தவம் மேற்கொண்டான். அப்போது சிவபெருமான் லிங்க வடிவில் அவன் முன் தோன்றினார். இந்த லிங்கத்திற்கு சிவபெருமான் வீரேஸ்வர லிங்கம் என்று பெயரிட்டார்.

சிவபெருமானின் கூற்றுப்படி, வீரேஸ்வர லிங்கத்திற்கு பூஜை, அபிஷேகம் மற்றும் அர்ச்சனை செய்பவர் எல்லாவிதமான மகிழ்ச்சியையும். செழிப்பையும். வெற்றி யையும் அடைவார்.

காசி காண்டம், அத்தியாயம் 83 இன் வீரேஸ்வரருக்கு செய்பவர் மூன்று படி, ஆத்ம பூஜை கோடி லிங்கங்களின் பூஜை செய்த பலனைப் பெறுகிறார்.

ஆத்ம வீரேஸ்வரர்

சதுர்த்தசி இரவுகளில் உறங்காமல் இந்த லிங்கத்தை வழிபடுவது மங்களகரமானதாக கருதப்படுகிறது. இந்த லிங்கத்திற்கு பஞ்ச அமிர்தம் கொண்டு அபிஷேகம் செய்வதும் மங்களகரமானதாக கருதப்படுகிறது.

காசி காண்டம். அத்தியாயம் 11. குழந்தை பாக்கியத்திற்காக ஆத்ம வீரேஸ்வரரின் பூஜை/அர்ச்சனையின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறது. முனிவர் ஒருவரான விஸ்வனரும் அவரது பக்தியுள்ள மனைவியும் காசியில் பல்வேறு இடங்களில் பிரார்த்தனை செய்து இறுதியாக ஆத்ம



e-magazine
egamalar.com

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.





வீரேஸ்வரரின் சித்த பீடத்தை அடைந்தனர். அவர் பல மாதங்கள் இந்த கோவிலில் அனைத்து சடங்குகள் மற்றும் சடங்குகளை செய்தார், அபிலாஷ அஷ்டகம் என்ற பிரார்த்தனையை வாசித்தார். ஒரு நாள் அவர் லிங்கத்தின் அருகே எட்டு வயது சிறுவன் நிற்பதைக் கண்டார். முனிவர் சிவபெருமானை எப்படி வழிபடுகிறாரோ அதே ஆர்வத்துடன் சிறுவனை வணங்கத் தொடங் கினார்.

அந்தச் சிறுவன் வேறு யாருமல்ல. சிவபெருமானே தன் பக்தர்களை ஓராண்டு காலம் அபிலாஷ அஷ்டகம் பாராயணம் செய்யும்படி வழியனுப்பினார். (இது முனிவர் விஸ்வனரால் செய்யப்பட்டது) இது நிச்சயமாக குழந்தை இல்லாத தம்பதிகளுக்கு சந்ததியை ஏற்படுத்தும். பின்னர், சிறுவன் ஆத்மா வீரேஸ்வர லிங்கத்தில் மறைந்தான்.

இந்த லிங்கம் காசி காண்டத்தில் வீரேஸ் வரர் என்று குறிப்பிடப்பட்டாலும் தற்போது இந்த லிங்கம் ஆத்ம வீரேஸ்வர லிங்கம் எனறியப்படுகிறது. இந்த புனித லிங்கம் லிங்க புராணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கோவிலின் இடம்

ஆத்ம வீரேஸ்வரர் கோவில் சிகே 7/158, சிந்தியா காட் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இது வாரணாசியில் உள்ள ஒரு பிரபலமான இடமாகும். சிந்தியா காட் வழியாக படகு மூலம் இந்த இடத்தை அடையலாம். மாற்றாக சௌக் வரை சைக்கிள் ரிக்ஷாவில் பயணித்து, சந்துகளில் நடந்து கோயிலை அடையலாம். ஆத்ம வீரேஸ்வரர் கோவிலில் ருத்ர ஜபம் செய்வது மிகவும் பலன் தரும்.

### பூஜைகளின் வகைகள்

ஆலயம் காலை 05.00 மணி முதல் 11.30 மணி வரையிலும், 12.30 மணி முதல் இரவு 9.30 வரை வழிபாட்டிற்காகவும் திறந்திருக்கும்.

இரவு 8.45 மணிக்கு செய்யப்படும் சிறப்பு ஆரத்தி ஒரு கண்கொள்ளா காட்சியாகும். சிறப்பு பூஜை செய்ய முன் பூஜாரியை அணுகுவது நல்லது.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

e-magazine
aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

சார்பில் வெளியிடும்


சிறப்பு மலர்

# அருள்தரும் அற்புத ஆலயங்கள்



## சிவஸ்தலங்களும் அற்புதங்களும்

பரிகாரங்களும் பலன்களும்
ஆயுள் தரும் கோவில்கள்
முக்கிய முருகன் கோவில்கள்





பழனி முருகனும் நடுப்பழனியும்
திருவண்ணாமலை தீப தரிசன சிறப்புகள்
பிடித்துவைத்த பிள்ளையார் பலன்கள்

விரைவில்...
உங்கள் கைகளில்

ஆன்மிக அன்பர்கள் இதழ் குறித்த தகவலை பெற தொடர்பு கொள்ளவும்

Ph:9994323622 / 9994162182 9444228203

# இடுகாட்டு மாடனும் ஈசனின் வடிவே!

கடவுள் உருவாக்கிய மதம்

மரணம் என்பது முடிவல்ல ஒரு வாழ்க்கையின் அடுத்த அத்தியாயமே அதாவது இன்னொரு பகுதியின் துவக்கமே என்பது தான் மரணத்தை பற்றிய இந்திய ஞானிகளின் முடிவு இதை மிக அழகாக ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு உதாரணத்தின் மூலம் சொல்வார். ஓங்கி வளர்ந்த மரத்தின் உச்சாணி கொம்பு மீது ஒரு பறவை அமர்ந்திருக்கிறது சிறிது நேரம் அந்த கிளையின் மீது அமர்ந்திருக்கும் பறவை திடீரென்று வேறொரு கிளையில் சென்று உட்காருகிறது. இது தான் மரணம் என்பதும் இந்த உடம்பில் இருக்கும்



உயிர் என்ற பறவை வேறொரு கிளையில் அல்லது உடம்பில் உட்காரும் நிகழ்வை முடிவு என்று கருத கூடாது என்பது அவரின் கருத்து. பல்லாண்டுகாலமாக உயிர்களின் வாழ்க்கை தொகுதியை பகுத்து ஆராய்ந்தால் இதுவே அனுபவ உண்மை என்பது தெரியவரும். ஆனால் ஏனோ சிலர் இதை ஏற்பது இல்லை. மரணம் என்பது இன்னொரு துவக்கத்தின் வடிவமல்ல அது முடிவு முற்றிலுமாக அழிந்து போவது என்கிறார்கள். வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு இவை எவற்றிலும் சிவப்பு வண்ணம் இருப்பது இல்லை. சரியான விகிதத்தில் இவைகள் கலக்கும் போது தானாகவே சிவப்பு வண்ணம் தோன்றுகிறது அதை போலவே பஞ்ச பூதங்களின் செயற்கையால் உடல் ஏற்படுகிறது உடலில் உயிரும் தோன்றி இயங்குகிறது. சேர்ந்த பூதத்தில் ஒன்று குறைந்து விட்டால் உயிர் என்பது உடலை விட்டு வெளியேறாமல் அந்த உடம்பிற்குள்ளேயே அழிந்து போகிறது என்கிறார்கள்.

மரணத்திற்கு பிறகு ஒரு உயிர் அடைகின்ற நிலைமை என்ன? என்பதை முற்றிலுமாக தெரிந்து கொள்ளும் காலம் வரையும் இந்த சர்ச்சை நீடித்து கொண்டே இருக்கும் என்பது உண்மை. உடம்பு இல்லை என்றாலும் உயிர் வேறொரு உடம்பில் புகுந்து புதிய பிறப்பை எடுக்கின்ற வரை வேறொரு உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் என்று நம்புவோரும் உடல் அழியும் போதே உயிரும் அழிந்து விடுகிறது என்று நம்புவோரும் பரஸ்பரம் ஒரு முடிவிற்கு வந்து விட்டால் உலகில் உள்ள எத்தனையோ சர்ச்சைகள் ஓய்ந்து விடும். கடவுள் இருக்கிறாரா? இல்லையா? ஏழையாக இருப்பதும் செல்வனாக இருப்பதும் இயற்கையின் சட்டமா? பொருளாதார திட்டமா? என்பது போன்ற கேள்விகளுக்கும் முழுமையான விடைகள் கிடைத்துவிடும். மரணத்திற்கு பிந்தைய மனித வாழ்வின் நிலையறியாத வரை மரணத்தை பற்றிய சிந்தனைகளை தவிர்க்க முடியாது. மனிதன் எப்போது சிந்திக்க ஆரம்பித்தானோ அப்போதே மரணத்தை பற்றிய ஆராய்வை துவங்கி விட்டான் எனலாம்.

மரணத்தை பற்றிய ஆய்வு என்றவுடன் அந்த ஆய்வுக்கு மூலமாக எது இருந்திருக்க வேண்டும்? என்பதை சிந்திக்க வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு. மரணம் என்பது முற்றும் முதலுமான முடிவு என்று ஆதி மனிதன் கருதி இருந்தால் அதை பற்றிய சிந்தனையை அவன் வளர்த்திருக்க மாட்டான். எனவே அவன்



மரணத்திற்கு பிறகும் வாழ்க்கை இருக்கிறது பூமியில் வாழ்ந்த உயிர்கள் பூமியை விட்டு உடலை விட்டு போய்விட்டாலும் மீண்டும் அது பூமியோடு தான் வாழ்ந்த பகுதியோடு தன்னை சார்ந்த மனிதர்களோடு உறவு வைத்து கொள்ள விரும்புகிறது அதற்காக போராடுகிறது என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஆழமாக இருந்தது. அதே நேரம் இறந்து போன ஆத்மா தான் நினைத்தால் நமக்கு ஆபத்தையும் விளைவிக்க முடியும் அரவணைப்பையும் தர இயலும் என்று கருதினான். இதன் விளைவாக தனக்கு பிரியமான ஆத்மாக்களுக்கும் சரி தன்னை பிரியம் கொள்ளாத ஆத்மாவாக இருந்தாலும் சரி அவைகளுக்கு திருப்தி ஏற்படுத்துகின்ற சடங்கு முறைகளை வழிபாடுகளை செய்தான். மனிதர்களின் இத்தகைய வழிபாடு அதாவது இறந்தவர்களை வழிபடுவது அச்சத்தாலும் மரண பயத்தாலும் வந்தது எனவே அந்த வழிபாடு




e-magazi
aanmeegamalar.com

தாழ்மையானது கடைபிடிக்க வேண்டிய அளவு தகுதி இல்லாத கீழ்மையானது என்று சில அறிவாளிகள் முடிவெடுத்து விட்டார்கள்.

முன்னோர்களை வழிபடுவது ஆவிகளை வழிபடுவதாகும் எனவே அது நாகரீகமான வழிபாட்டு முறையல்ல என்று சில அறிவாளிகள் சொன்னவுடன் நமது நாட்டில் இருக்கும் சிலர் இந்து மதத்தின் மீது வசைமாரி பொழிகிறார்கள். பேய்களை வழிபடுவதும் நாய்களை வழிபடுவதும் இந்து மதத்தில் மட்டுமே உள்ள வியாதி உலகத்தில் உள்ள அனைத்து அநாகரீகங்களும் இந்தியாவி லிருந்தே உற்பத்தியாகி இருக்கிறது என்று கூச்சல் போடுகிறார்கள். இவர்களின் கூச்சல் முற்றிலும் தவறானது என்று சொவ்லத்தை விட அறியாமை மயமானது என்று சொன்னால் சரியாக இருக்கும். இறந்தவர்களை வழிபடும் முறை இந்தியாவில் மட்டுமல்ல இந்து மதத்தில் மட்டுமல்ல உலகம் முழுவதுமே இருக்கிறது என்பதை முதலில் உணர வேண்டும். பல ஐரோப்பிய அறிஞர்களால் நாகரீக தொட்டில் என்று அழைக்கப்படும் ஆதி ரோமாபுரியில் வாழ்ந்த மக்கள் தங்களது வாழ்வின் லட்சியமே தாய்நாட்டிற்காகவும் இறந்து போன தங்களது மூதாதையரை புதைத்த கல்லறைகளை காப்பதற்காகவும் மட்டுமே என்று கருதினார்கள். இறைவனை வழிபடுவதற்கு முன்னால் இறந்தவர்களை வழிபடுவது கிரேக்கர்களின் மரபாகவும் இருந்தது.

பீஜி தீவு என்ற சின்னஞ்சிறிய தீவுநாட்டு மக்கள் தம்மை ஆளுகின்ற மன்னர்களை ஏறக்குறைய இறைவனின் அந்தஸ்திலே கண்டார்கள். இதனால் மன்னன் இறந்தபிறகும் வழிபாட்டுக்குறியவனாக இருந்தான். ஆப்பிரிக்காவில் மேற்கு கடற்கரை பக்கமாக வாழுகின்ற தகோமியர் என்ற இன மக்கள் தங்களது அரசர் கடவுளால் பூமிக்கு அனுப்பப்பட்ட தூதர் என்று கருதினர். சில வேளைகளில் அரசருக்கும் கடவுளுக்கும் பெரிய வித்தியாசங்கள் கிடையாது என்பதும் அவர்களின் நம்க்கையாக இருந்தது. அதே ஆப்பிரிக்காவில் லோகோஷ்கோ என்ற இனத்தினர் அரசனை சாட்சாத் கடவுளாகவே வணங்கினர். அமெரிக்காவில் வாழ்ந்த குயான ஷியாம்பக் என்ற செவ்விந்திய இனத்தார் அரசனின் கட்டளையை இறைவனின் கட்டளையாக கருதி கடவுளுக்கு கட்டுபடுவது போல் மன்னனுக்கும் கட்டு பட்டு வாழ்ந்தனர். பெரு நாட்டிலும் நியூசிலாந் நாட்டிலும் அரசனும் தேவனும் ஒன்றாகவே கருதபாட்டனர். இப்படி அரசனை தெய்வமாக கருதிய அனைவருமே அரசனின் மரணத்திற்கு பிறகு அவனை வழிபாடு நடத்தி மகிழ்விப்பதில் முனைப்பு காட்டினார்கள்.

சீனாவில் முன்னோர்களை வழிபடுவதில் அனைத்து தரப்பு மக்களுக்கும் சிறந்த ஆர்வம் இருந்தது. அவர்களின் முன்னோர் வழிபாட்டின் காலம் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே துவங்குகிறது எனலாம் அந்த நாட்டில் கன்பூசியஸ் மதம் தோன்றுவதற்கு முன்பே புத்தமதம் வருவதற்கு முன்பே டிராகன் வழிபாடு என்ற நாக வழிபாடு தோன்றுவதற்கு முன்பே முன்னோர் வழிபாடு வந்துவிட்டது என்று சொல்லலாம். இன்னும் சொல்ல போனால் சீனர்களின் முதல் வழிபாடே ஆவி வழிபாட்டிலிருந்து துவங்குகிறது என்று சொல்லவேண்டும். இவர்களும்




அரசனை மக்கள் தலைவர்களை இறையம்சம் பொருந்தியவர்களாகவே நினைத்தார்கள் அதனால் அவர்களின் மரணத்திற்கு பிறகும் வழிபட கூடிய மூர்த்திகளாக திகழ்ந்தார்கள்.

கிரேக்க மதத்தை போலவே எகிப்து நாட்டு மதத்திலும் முன்னோர் வழிபாடு என்பதே அடித்தளமாக இருந்தது எகிப்து மக்கள் மற்றவர்களை விட ஒருபடி மேலே சென்று இறந்து போன முன்னோர்கள் மீண்டும் ஒரு காலத்தில் பூமிக்கு வருவார்கள் அப்போது அவர்கள் வாழ்வதற்காக அவர்களின் உடம்பு கண்டிப்பாக தேவைப்படும் உடம்பு இல்லை என்றால் மிகவும் சிரமபடுவார்கள் அதனால் அவர்களது உடலையும் கெட்டு போகாமல் பாதுகாப்பாக வைக்க வேண்டியது வாழ்பவர்களின் கடமை என்று நினைத்தார்கள். இதன் விளைவாகவே இறந்த உடலை பதபடுத்தி காப்பாற்றுகின்ற மம்மி பழக்கமும் உடம்பு கெட்டு போகாமல் இருக்க செய்யும் பிரம்மீடு உருவாக்கமும் ஏற்பட்டது எனலாம். இப்படி உலகம் தழுவியதாக இருக்கும் முன்னோர் வழிபாட்டிற்கு இந்து மதம் மட்டுமே காரணம் என்று சொல்லுவது எந்த வகையிலும் பொருந்தி வராது.

உலக மக்கள் பலரும் கருதியது போலவே பண்டையகால பாரத மக்கள் அரசனையும் இறைவனாக கருதினார்கள் என்று துணிந்து சொல்லலாம். இதனால் தான் நாடாளும் மன்னனை கண்டேன் நாராயணனை கண்டேன் என்று அடியவர்கள் பாடினார்கள். மன்னனும் இறைவனும் ஒன்று என்ற நம்பிக்கைக்கு இந்த பாடல் மட்டும் ஆதாரம் அல்ல இதையும் தாண்டிய பல ஆதாரங்கள் இருக்கின்றன. திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சுடலைமாடன் வழிபாடு என்பது புகழ்பெற்றதாகும் சுடலை மாடனை அப்பகுதி மக்கள் சிறு தெய்வமாக கருதுவது இல்லை பரமசிவனின் புத்திரனாக சுடலைமாடன் கருதபட்டாலும் பல இடங்களில் சுடலைமாடனே சிவபெருமான் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. சுடலை மாடன் கழுத்தில் மண்டை ஒடு மாலையும் அவர் உடல் முழுவதும் சுடுகாட்டு சாம்பலை பூசி இருப்பதும் சுடலை மாடனுக்கும் சிவபெருமானுக்கும் உள்ள ஒற்றுமையை காட்டுகிறது. மஹாபாரதத்தில் அனுசான பர்வம் என்ற பகுதியில் பிணம் எரிக்கும் இடம் அனைத்தும் என்னுடைய இடம் என்று சிவபெருமான் கூற்றாக வரும் பகுதியை இங்கு ஒப்பிட்டு பார்க்க வேண்டிய சூழல் உள்ளது. தென்னகத்தில் சுடலை மாடன் கோவில் அமைப்பு எப்படி உள்ளதோ அதே போலவே நீலகிரி பகுதில் உள்ள தோடர்களின் வழிபாட்டு கூடங்களும் அமைந்துள்ளன எனவே ஆதிகால முறைப்படி சுடலையாண்டி, சுடலைமாடன், சுடலை ஆண்டவர் என்பதெல்லாம் சிவபெருமானே என்று எண்ணத் தோன்றுகிறது.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

வைதீக முறைப்படி சிந்தனை செய்பவர்களுக்கு பிணம் எரிக்கின்ற இடுகாட்டு பகுதிகளில் ஆலயம் அமைந்துள்ள சுடலை மாடனும் சிவபெருமானும் எப்படி ஒன்றாக இருக்கலாம் என்ற சந்தேகம் வரும். இந்த சந்தேகத்திற்கு மிக தெளிவான பதில் சிற்ப சாஸ்திர நூல்களில் கிடைக்கிறது. புதியதாக ஒரு ஊரை நிர்மாணம் செய்கின்ற போது ஊருக்கு வெளியே தான் இடுகாட்டையும் கோவிலையும் அமைக்க வேண்டுமென்ற குறிப்பு உள்ளது. இந்த குறிப்பை அடியொற்றியே புகழ் பெற்ற சிவாலயங்கள் சமாதிகளின் மீது கட்டப்பட்டு இருப்பதாக பல கல்வெட்டு ஆதாரங்கள் கூறுவதை

e-magazine
aanmeegamalar.com



கவனிக்க வேண்டும். பழைய வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள சோழபுரம் என்ற ஊரில் ஒன்பதாம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டு ஒன்று உள்ளது அதில் ஆதித்த சோழன் என்ற மன்னன் கட்டிய சிவன் கோவில் அவனது தந்தை புதைக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டதாக குறிப்பு இருக்கிறது. இதே போலவே சித்தூர் மாவட்டத்தில் தொண்டமான் நாடு என்ற இடத்தில் ஆதித்த கரிகாலன் புதைக்கப்பட்ட பள்ளிபடையிலிருந்து கோவில் எழுப்ப பட்டதாக தகவல் தரும் கல்வெட்டும் இருக்கிறது. மேல்பாடி என்ற ஊரில் பத்தாம் நூற்றாண்டை சேர்ந்த கோவில் ஒன்று உண்டு இதை முதலாம் ராஜ ராஜ சோழன் கட்டியதாகவும் அக்கோவில் ஆற்றூரில் போரிட்டு வீரமரணம் அடைந்தவர்களின் சமாதியின் மீது உள்ளதாகவும் கல்வெட்டு தகவல்கள் சொல்கின்றன. இவைகளை எல்லாம் வைத்து பார்க்கும் போது இறந்து போன அரசர்களை தெய்வமாக கருதுவதில் மக்களுக்கு ஆட்சேபனை இருக்கவில்லை என்பது புரிகிறது.

மன்னர்களை மட்டுமல்ல மகான்களையும் கூட இந்திய மக்கள் தெய்வமாகவே கருதினார்கள். நடமாடும் தெய்வமாக இருந்த முனிவர்கள் ஞானிகள் சித்தர்கள் ஆகியோரின் சமாதிகளின் மீது சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து வழிபடுவதில் மக்களுக்கு பெருத்த ஆர்வம் இருந்தது. உதாரணமாக தஞ்சாவூர் பெரிய கோவிலில் கரூர் சித்தர் சமாதி இருப்பதும், விருதாச்சலம் விருத்தகரீஸ்வரர் ஆலயத்தில் பாம்பாட்டி சித்தர் சமாதியும், பழனியில் போகர் சமாதியும் சித்தர்களின் தலைவர் என்று அழைக்கபடுகின்ற திருமூலரின் சமாதி சிதம்பரம் நடராஜ பெருமாள் ஆலயத்திலும் இருப்பதை குறிப்பிட்ட வேண்டும். தமிழ் நாட்டில் புகழ்பெற்ற பதினெட்டு சித்தர்களுக்கான சமாதிகள் பதினெட்டு சிவாலயங்களாக இருப்பதை நாம் அறிவோம். சித்தர்களின் சமாதிகளின் மேல் அமைந்துள்ள கோவில்களிலேயே இறைவனின் ஆகர்சனம் அதிகம் இருப்பதாக பல மக்கள் நம்புகிறார்கள் பல நேரங்களில் அது உண்மையாகவும் இருக்கிறது. இதை தெளிவான நேரடியான உதாரணத்திற்கு சொல்லவேண்டும் என்றால் திருக்கோவிலூர் மணபூண்டியில் அமைந்துள்ள ராகவேந்திரரின் குருவுக்கும் குருவான ஸ்ரீ ரகோத்தம சுவாமிகளின் மூல பிருந்தா வனத்தை காட்டலாம் ஆயிரம் ஆயிரம் மன கலக்கத்தோடு அந்த பிருந்தவனத்திற்குள் நுழைந்தாலும் அத்தனை கலக்கமும் ஒரு நொடியில் மறைந்து விடுவதை நேரடியாக பார்க்கலாம்.

உலகில் பல நாடுகளிலும் இறந்தவர்களை வழிபடுகின்ற முறை இருந்தாலும் இந்திய மக்கள் இறந்தவர்களை வழிபடுகின்ற முறை மிகவும் வித்தியாசமானது இவர்கள் இறந்தவர்கள் மீது மரியாதை மட்டுமே வைத்தோ அல்லது அச்சத்தை கொண்டோ வழிபடவில்லை மாறாக நன்றி விசுவாசத்தை அடிப்படையாக கொண்டு இந்திய வழிபாடு அமைந்துள்ளதை மறக்க கூடாது. எனக்காக என் உயர்வுக்காக என் நல்வாழ்விற்க்காக உழைத்த எனது முன்னோர்களை நன்றியோடு நினைத்து பார்ப்பது என் கடமை அவர்கள் எனக்கு நன்மை செய்கிறார்களா? தீமை செய்வார்களா? என்பதை பற்றியெல்லாம் எனக்கு கவலை கிடையாது நான் அவர்களுக்கு நன்றியுடையவாக இருக்கிறேனா? என்பது மட்டும் தான் முக்கியம். என்று கருதுவதே இந்திய மரபு. இதன் அடிப்படை யிலேயே இறந்தவர்களை மறக்காமல் நினைத்து பார்க்கும் சிரார்த்தம் என்ற சடங்கு இந்து மதத்தில் அர்த்தத்தோடு அமைந்துள்ளது. அந்த சிரார்த்த சடங்கின் தத்துவத்தை புரிந்து கொண்டால் இந்து மதத்தில் உள்ள முன்னோர்களை வழிபடும் முறையை தெளிவாகவே தெரிந்து கொள்ளலாம்.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு

போன்: 09442426434



e-magazine

aanmeegamalar.com

# சோட்டாணிக்கரை அம்மனுக்கு நிகரான வெற்றி பாலா கோவில் கும்பாபிஷேகம்

திருவள்ளுர் ரெட்டில்ஸ் மெயின்ரோட்டில் கீழனூர் கிராமத்தில் ராகவா கிளினிக் அருகில் அமைந்துள்ள ஸ்ரீ வெற்றி பாலா கோவில் கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற வுள்ளது.

29.01.2025 முதல் 02.02.2025 வரை ஐந்து நாட்கள் கும்பாபிஷேக விஷேச பூஜை, ஆராதனை நடைபெறவுள்ளது.

இத்திருத்தலத்தில், சிவபெருமான், முருகப் பெருமான், விநாயகப்பெருமான், காமாட்சி அம்மன் சன்னதிகளுக்கு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

பாலா கோவில்கள் தமிழகத்தில் பரவலாக காணப்பட்டாலும் இந்தக் கோவிலுக்கு தனிப் பட்ட பல்வேறு விஷேஷங்கள் உள்ளதாக கூறப் படுகிறது.

இந்தக் கோவிலில் உள்ள விஷேஷங்கள் மற்றும் சிறப்பு குறித்து பிரபல பாடகர் வீரமணிராஜூ அவர்கள் கூறும்போது, இக்கோவில்குறித்து தேவ பிரசன்னம் பார்த்த போது, இத்திருக்கோவில் சோட்டானிக்கரை பகவதி அம்மனுக்கு இணை யான அம்மன் குடிகொண்டுள்ளதாக பிரசன்னத் தில் கூறப்பட்டதாக கூறுகிறார்.

29.01.2025 ஆச்சார்ய வர்ணம், பிரசாத பரிகாரம், பிரசாத சூடி, பீட பிரதிக்ஷா, ராக்ஷ்கந்த ஹோமம், வாஸ்து ஹோமம், வாஸ்து கலசா, வாஸ்துபலி, வாஸ்து புண்ணியம் நிகழ்வுகள் நடைபெறும். தொடர்ந்து ஐந்து நாட்கள் வேத பாராயண, ஆரத்தி பூஜைகள் நடைபெறும்.

கும்பாபிஷேக நிகழ்வின் 3ம் நாளான (31.01.2025) அன்று வெள் ளிக்கிழமை மாலை கலச பூஜை மற்றும் ஐயப்ப பூஜை நிகழ்வுகளைத் தொடர்ந்து கலைமாமணி வீரமணி ராஜூ அவரது மகன் அபிஷேக்ராஜூ பக்தி இசைக் கச்சேரி நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து






ஐந்தாம் நாள் (02.02.2025) அன்று வெற்றி பாலா கோவிலில் கும்பாபிஷேக விழா நடைபெறும்.

கோவிலுக்கு செல்லும் வழி, 111, திருவள்ளுர் ரெட் ஹில்ஸ் மெயின் ரோடு, கீழானூர் கிராமம், ராகவா மருத்துவமனை அருகில், தொடர்பு எண் 9786223577, 9940482616


e-magazine
aanmeegamalar.com

# முன் ஜென்ம வினைகளைப் போக்கும்

# நவபுலியூர் யாத்திரை





மனிதர்கள், தங்களின் முன் ஜென்மவினைகள் யாவும் தீர பல வழிகளில் முயல்கிறார்கள். நமது இந்து தர்மத்தில், இப்படிப்பட்ட முன் ஜென்ம வினைகள், நீங்க சில வழிகாட்டுதல்கள் உள் ளன. அதன்படி நடந்து, முழு வினைகளை தீர்க்க முடியாவிட்டாலும், அதன் வீரியத்தை குறைத்துக் கொள்ள சில வழிகாட்டுதல்கள் உள்ளன. அவற்றைபற்றி இந்த கட்டுரையில் காணலாம்.

ஆடல் வல்லான், "நடராஜ பெருமான் "இந்த வினை பயன் தீர சில வழிகாட்டுதலை, ஸ்ரீ வியாக்ரபாத முனிவருக்கும், ஸ்ரீ பதஞ்சலி முனி வருக்கும் உபதேசம் செய்துள்ளார்.

ஆம், அதுதான் "நவபுலியூர் யாத்திரை" அதாவது நவபுலியூர் தரிசனம் என்ற யாத்திரை தரிசனம் ஆகும். இந்த யாத்திரையை நடத்தி. தரிசனம் செய்துவிட்டு முடிவாக "ஸ்ரீரங்கத்தில் முடித்துக்கொள்ளுமாறு" கட்டளையிட்டார்.

இந்த, நவபுலியூர் தரிசன யாத்திரை, 11, 12–ஆம் நூற்றாண்டில் பிரசித்திபெற்றே இருந்தது. பின்னர், இதனை, "பஞ்ச புலியூர் தரிசனம்'', என்று பெயர் பெற்று விட்டது. இன்றைய கால சூழ்நிலையில் மக்கள், தங்களின், "முன் ஜென்ம வினை தீர'' இந்த யாத்திரையை மேற்கொண்டு.. தங்களின் முன் ஜென்ம வினையை,, ஓரளவு குறைத்து கொள்ளலாம்.

"நவபுலியூர் யாத்திரை'' என்ற இந்த தரிசனம், "தில்லையில்" (சிதம்பரம்) தொடங்கி, தில்லை முதல், மொத்தம் ஒன்பது தலங்களை தரிசிப்பது ஆகும்.


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

அவை..

1. பெரும்பற்றப்புலியூர்.
(பெரும்பத்தரபுலியூர்) தில்லை.
2. திருப்பாதிரிப்புலியூர்.
(திருப்பாத்திப்புலியூர்)கடலூர்.
3. எருக்கத்தம்புலியூர்
விருத்தாசலம் அருகே உள்ளது.
4. ஓமாம்புலியூர். காட்டுமன்னார்க்கோயில்
அருகே. உள்ளது.
5. காணாட்டமுள்ளூர். (காணாட்டம்புலியூர்).
ஓமாம்புலியூர் அருகே உள்ளது.
6. சிறுபுலியூர்
மயிலாடுதுறை வழியில் உள்ளது.
7. அத்திப்புலியூர்
திருவாரூர் அருகே உள்ளது.
8. தாம்பளாம் புலியூர்
திருவாரூர் அருகே உள்ளது.
9. பெரும்புலியூர்
திருவையாறு அருகே உள்ளது.

## 1. பெரும்பற்றப் புலியூர்

இத்தலம் சிதம்பரத்தில் அமைந்துள்ளது. யாத்திரையில் முதலில் இத்தலம் வந்து, இங்குள்ள "சிதாம்பரநாதரை" வழிபட்டு பின்னர், "மூலட்டானேஸ்வரரையும், அம்பிகை "சிவகாமி சுந்தரி''யையும் வழிபட்டு. இரவில் சிதம்பரத்தில் தங்கி, "அர்த்த ஜாம பூஜையை'' கண்டு, பின் விடியற்காலை"திருவனந்தல்'' பூஜை காண்பது சிறப்பு.




## 2. திருப்பாதிரிப் புலியூர்

இத்தலம் கடலூரில் அமைந்துள்ளது. இது சந்திர பரிகார தலமாகும். இத்தலத்தில்தரிசனம் செய்தால், "16 முறை காசியை தரிசனம் செய்த பலன் கிடைக்கும்'' தவிர "8 முறை திருவண்ணா மலையை தரிசித்த பலன் கிடைக்கும்.

## 3.எருகத்தம்புலியூர்

இத்தலம்விருத்தாசலம்அருகே அமைந்துள்ளது. இந்த ஊருக்கு "ராஜேந்திரப்பட்டினம்'' என்ற பெயரும் உண்டு. இது "ராகு-கேது'' பரிகார தலமாகும். இத்தலத்தில், "திருநீலகண்ட நாயனார்'' பிறந்துள்ளார்.

## 4. ஓமாம் புலியூர்

இத்தலம் காட்டுமன்னார் கோயில் அருகே அமைந்துள்ளது. இத்தலம், குருபரிகார தலம் ஆகும்.

## 5. காணாட்டமுள்ளூர்

இத்தலம், ஓமாம்புலியூர் அருகே அமைந்துள்ளது. இத்தலம் ராகு பரிகார தலம் ஆகும். இங்கு பதஞ்சலி முனிவரின் "சிலா'' ரூபம் உள்ளது.

## 6. சிறுபுலியூர்

இத்தலம் மயிலாடுதுறை, கொல்லுமங்குடியில் அமைந்துள்ளது. இத்தலம் புதன் பரிகாரதலம் ஆகும். யாத்திரை வந்து, "புலிக்கால் முனிவரும், (வியாக்ரபாத முனிவர்) பதஞ்சலி முனிவரும் இங்கு தான் மோட்ச மந்திரத்தை ஜெபித்தார்கள்.

## 7. அத்திப்புலியூர்

சிறுபுலியூரிலிருந்து, நன்னிலம் வழியாக, திரு வாரூர் வழியில், இத்தலம் அமைந்துள்ளது. இது சுக்கிரன் பரிகார தலம் ஆகும். வியாக்ரபாத முனிவருக்கும், பதஞ்சலி முனிவருக்கும் கல்யாணசுந்தரராக இறைவன் தரிசனம் தந்த தலம் இது.

## 8. தப்பளாம்புலியூர்

தப்பளாம்புலியூர், (மண்டூக வியாக்ரபுரம்) திருவாரூருக்கு தென் கிழக்கே இத்தலம்அமைந்துள்ளது. "மண்டூக மகரிஷிக்கும், வியாக்ரபாத முனிவருக்கும் இறைவன் அருள் வழங்கிய தலம் இது. வியாக்ரபாத முனிவரின் புலிக்கால், திருமேனியை, நீக்கி பழைய திருமேனியை இறைவன் தந்த தலம் இது.

## 9. பெரும்புலியூர்

இத்தலம் திருவையாறு அருகேஅமைந்துள்ளது. இங்கும் தரிசனம் செய்து, பின்னர் "வியாக்ரபாத முனிவரும், பதஞ்சலி முனிவரும், காவிரிக்கரை ஓரமாக சென்று, ஸ்ரீரங்கத்தை அடைந்தார்கள்.

பின்னர் அங்கு, பிரம்மாவின் தரிசனம் பெற வேண்டி, திருப்பட்டூர் சென்றார்கள். அங்கு இருவரும், ஸ்ரீ பிரும்மபுரீஸ்வரரையும், ஸ்ரீ பிரும்மாவையும் வணங்கி, "ஜீவசமாதி'' ஆனார்கள்.

இந்த யாத்திரையை, இந்த வரிசைப்படி.. தரிசிக்க. ஒன்பது, அல்லது பன்னிரண்டு நாட்கள் ஆகும். இந்த யாத்திரையால் மக்களின் கர்ம வினைகள் ஓரளவு குறையும்.

# கட்டுச்சாதக் கூடையுடன் வரும் அம்பாள்




தஞ்சாவூரிலிருந்து இருபது கிலோ மீட்டர் வடமேற்கில் திருக்காட்டுப்பள்ளித் திருத்தலம் உள்ளது. திருச்சிதஞ்சாவூர் ரயில் பாதையில் உள்ள பூதலூர் ரயில் நிலையத்திலிருந்து வடக்கே எட்டாவது கிலோ மீட்டரில் உள்ள ஊர் இது. தஞ்சாவூரிலிருந்து திருக்கண்டியூர் வழியாகவும், கல்லணையிலிருந்து கோயிலாடி வழியாகவும் செல்வதற்குப் பாதை வசதிகள் உண்டு. கந்தர்வக் கோட்டையிலிருந்தும் திருவையாற்றிலிருந்தும் கூட இங்கு வரலாம்.

காவிரியாற்றின் தென்கரையில் அமைந்துள்ள இத்திருத்தலத்தைக் ‘கற்றவர்கள் கருதும் காட்டுப் பள்ளி என்று திருஞானசம்பந்தப் பெருமான் புகழ்ந் துள்ளார். இதை மேலைத் திருக்காட்டுப்பள்ளி என்று குறிப்பிடுவது மரபு. சீர்காழிக்குத் தென் கிழக்கில், திருவெண்காட்டிற்கு வெகு அருகில் இருக்கும். அகிலாண்டநாயகி உடனுறை ஆரண்ய சுந்தரேச்வரர் கோயில் இருக்கும் ஊர், கீழைத் திருக்காட்டுப்பள்ளியாகும்.

ஒரு சமயம் இந்திரன் முதலான தேவர்கள் மேலைத் திருக்காட்டுப்பள்ளிக்கு வந்து, அங்கு உறையும் சிவபெருமானையும் அம்பிகையையும் வழிபட்டார்கள். அப்போது அக்னி தேவன், தொட்ட பொருட்களையெல்லாம் சுட்டெரிப்பதால் ஏற்படும் பழியையும் பாவத்தையும் போக்கிக் கொள்ளும் பொருட்டு நியம நிட்டைகளோடு சிவ பெருமானுக்குப் பூஜைகள் பல செய்து களிப் புற்றான்.

அது கண்டு மனம் மகிழ்ந்த சிவபெருமான் அக்னி தேவனுக்குக் காட்சியளித்து, “அக்னி தேவா, உன் பாவம் நீங்க வேண்டுமானால், கிழக்கே ஒரு திருக்குளம் அமைத்து. உன் பெயரை அதற்கு ஈந்து, அதன் நீரை எடுத்து என்னை நீராட்டி வழிபட வேண்டும்“ என்று அருளினார். அவ்வாறே அக்னி தேவன் திருக்குளம் ஒன்று வெட்டி, அதன் நீரை எடுத்து சிவ பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்து வைத்தான். உள்ளத்தோடு உடலும் குளிர்ந்த இறைவன், அழல் தேவனை நோக்கி, “நீ விரும்பும் வரங்களைக்கேள்” என்றார்.

அதற்கு அக்னி தேவன், “இறைவா,என்னைப் போன்றே இத்தீர்த்தத்தில் நீராடி உங்களை வழிபடு வோரின் பாவங்களைத்தாங் கள் போக்கியருள வேண்டும். கோயிலுக்குச் சொந்தமான சொத் துக்களைக் கொள்ளையடிப்போர் தங்கள் குலத்தோடு நரகத்திற்குச் செல்ல வேண்டும். தங்களை நினைக்காமல், தங்களது ஆசியை நாடாமல் யார் எந்தச் செயலில் ஈடுபட்டாலும் அது நிறை வேறாமல் அரைகுறையாக நிற்க வேண்டும். இத்தலத்திற்கு வந்து தங்கி, தங்களை வழிப்படுபவர்களுக்கு மோட்ச பதவி தந்தருள வேண்டும்“ என்று வேண்ட, “அப்படியே ஆகட்டும்'' என்று இறைவனும் ஆசி வழங்கினார். அன்று முதல் இத்திருத்தலம் அக்னீசுரமென்று

e-magazine
aanmeegamalar.com

பெயர் பெற்றது. சுவாமி, அக்னிச்சுவரர் என்று அழைக்கப்பட்டார். தீயாடியப்பர் என்று தீந்தமிழ்ப் பெயரையும் அவர் பெற்றார்.

உறையூர் நந்தவனத்தில் பூத்த செவ்வந்தி மலர்களை அரசன் தன் மனைவியாருக்குக் கொடுத்து வருவதைப் பழக்கமாகக் கொண்டிருந் தான். அவர்களில் மூத்த மனைவி மட்டும் தனக் குக் கிடைத்த மலரை அரண்மனையிலிருந்த சிவ பெருமானுக்கு அணிவித்து மகிழ்ந்து வந்தாள்.

ஒரு சமயம்,உறையூரில் மண்மாரிப் பொழிய. அதனின்றும் தப்பிக்க மூத்த மனைவி திருக் காட்டுப்பள்ளிக்கு ஓடி வந்து விட்டாள். இறைவன் அவளுக்காக மனமிரங்கி. கானல் வெப்பம் தணித்து அருளியதாக் உறையூர் புராணம் கூறுகிறது. அனைத்தையும் ஆண்டவனுக்குஅர்ப் பணித்து உள்ளன்புடன் வழிபடுவோர் அவனது கருணைக்கு ஆளாகிறார்கள் என்பதற்கு இந் நிகழ்ச்சி மற்றுமோர் உதாரணமாக விளங்குகிறது.

இது மிகப் பழமையான கோயில். அதற்கு இங்குள்ள ‘ஏராளமான கல்வெட்டுக்களே சான்றுகளாகும். அழகிய ராஜ கோபுரத்தைக் கடந்து சென்றதும் வேடபுறம் சௌந்தர்ய நாயகியின் திருச்சந்நிதி; எதிரில் நர்த்தன விநாயகர். அடுத்து மற்றொரு சிறிய கோபுரத்தைக் கடந்து சென்றதும், மண்டபத்தில் நடராஜர் எழுந்தருளியிருக்கிறார், நவக்கிரகங்கள், பைரவர், சூரியனார், உள்ளனர். தேவாரப் பெரியோரான மூவர், சிலை உள்ளது. அடுத்து மகாமண்டபம், அர்த்த மண்டபம், கருவறை மூன்றும் உள்ளன.

மகா மண்டபத்தைவிடக் கருவறை சுமார் ஆறடி கீழே, பள்ளத்திலிருக்கிறது. ஏறக்குறைய தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் திருப்பணி செய்த்வர்கள் மகா மண்டபத்தை உயர்த்திக் கட்டி அதை அரைகுறையாக விட்டுவிட்டனர். பின்னர் பொறுப்பு ஏற்றுக் கொண்டவர்கள் கருவறையை அப்படியே வைத்துத் திருப்பணிகளை முடித்துக் குடமுழுக்குச் செய்துவிட்டனர். அதனாலேயே சுவாமி தாழ்வான பகுதியில் இருக்கிறார்!

மகாமண்டபத்தை யொட்டி கருங்கல்லால் ஆன உட்பிராகாரம் அமைந்துள்ளது. அது கருவறை மண்டபத்தின் தென்புறம், ஆலமர் கடவுளுக்குரிய கோஷ்டத்தில் இருக்கும் தட்சிணாமூர்த்தியின் சிற்ப வடிவம் எங்கள் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. வழக்கமாக நாம் ஆலயங்களில் காணும் உருவமல்ல அது. சின்முத்திரையோடு இடக்காலின் மீது வலக் காலை மடித்து ஆல மரத்தடியில் உள்ள மேடையின் மீது குருமூர்த்தி வீற்றிருக்க, கீழே சனகாதி முனிவர்கள் ஞானம் பெற; அதுவரை எந்தக் கோயில் கோஷ்டத்திலும் நாம் காணாத முக அமைப்பும் “யோக தட்சி ணாமூர்த்தி” வடிவில் அமர்ந்திருக்கும் முறையும் முற்றிலும் புதியதாகும்.

இரண்டாவது பிராகாரத்தில் தென்கோஷ்டத் தில் வழக்கமாக நாம் தரிசிக்கும் தட்சிணாமூர்த்தி யின் திருவுருவச் சிலை உள்ளது. அதற்குக் கீழ் ஒரு துவாரம் காணப்படுகிறது. அதன் வழியே பார்த்தால், உட் பிராகாரத்திலுள்ள தட்சிணாமூர்த்தி தரிசனம் தருகிறார். பிரகாரத்தைச் சுற்றிலும் உள்ள மாடப்பத்திகளில் வலம்புரி விநாயகர், திருமால், இலக்குமி, முருகன், ஏகாம்பரர் காமாட்சி, விச்வநாதர் விசாலாட்சி அகோர வீரபத்திரர் முதலியோரும், கோஷ்டங்களில் லிங்கோற்பவரும் துர்க்கையும் இருக்கிறார்கள். இந்தப் பிரகாரத்தில்தான் தீர்த்தம் கிணறும் உள்ளது. திருவிழாக்காலங்களில் சுவாமி இந்தப் பிரகாரத்தில்தான் வலம் வருகிறார்.

அதையடுத்து மூன்றாம் பிராகாரம். வடக்குப் பிராகாரத்தில் தென்புறம் நோக்கி அம்மன் சந்நிதியிருக்கிறது. இந்தப் பிராகாரத்தின் மதிற்சுவரையடுத்து ஊரின் நான்கு வீதிகளும் உள்ளன. இந்த நான்கு வீதிகளையும் ஒரு காலத்தில் கோட்டைச் சுவர்கள் சூழ்ந்திருந்தன. உள்ளே நுழைவதற்கு மூன்று, நான்கு வாயில்கள்



e-magazine
aanmeegamalar.com



அமைந்திருந்தன. கோட்டையின் வடக்கு வாயிலில் முனியாண்டார் கோயிலும், கிழக்கு வாயிலில் வரத விநாயகர், அனுமார் கோயில்களும் இருக்கின்றன.

அக்னிதேவர் அமைத்த அக்னிதீர்த்தக்குளம் தற்போது தூர்ந்து போய், அந்த இடத்தில் பேருந்து நிலையம் இருக்கிறது! மறைந்த குளத்தின் நினைவாக அருகிலுள்ள விநாயகர் கோயிலையடுத்து ஒரு கிணறு இருக்கிறது.

அதன் நுழைவாயிலில் 'புனித நீரூற்று' என்றும் அதனடியில் 'அக்னி தீர்த்தம்' என்றும் எழுதப்பட்டுள்ளன.

திருக்காட்டுப் பள்ளியில் நடைபெறும் விழாக்களில் பங்குனி உத்தரத் திருவிழா மிகச் சிறந்த முறையில் கொண்டாடப்படுகிறது. பங்குனி, மாதங்களில் பன்னிரண்டாவது. உத்தரம். நட்சத்திரங்களில் பன்னிரண்டாவது. இரண்டும் ஒன்று சேரும் நாளே நிறைமதி நாள். இமவானின் வேண்டுகோளுக்கிணங்கி சிவபெருமான் பங்குனி உத்தர நாளில் பார்வதியைத் திருமணம் செய்து கொண்டத் திருநாள். சிவம், சக்தியோடு இணையும் போது, உலகில் அன்பு பெருகி அறம் தழைக்கிறது; இன்பம் கூடுகிறது. மக்கள் மனம் நிறைகிறது.

இத்திருமணக் காட்சியே திருக்கயிலாயக் காட்சியாகும். திருநாவுக்கரசர் திருவையாற்றில் கண்ட கயிலைக் காட்சி இதுவேயாகும்.

பங்குனி மாதம் வளர் பிறையில் கொடியேற்றப் பெற்று பத்து நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. விழா முடிவில் பௌர்ணமி தினத்தன்று அம்மையப்பர் காவிரியாற்றில் அமைக்கப்பட்டுள்ள அழகிய பந்தலில் தங்கியிருந்து காட்சி தருவார். சமய வேற்றுமைகளைக் கடந்து பெருங்கூட்டமாக மக்கள் இத்திருவிழாவில் கலந்து கொள்கின்றனர்.

உத்தரத்தன்று காலை தீயாடியப்பரும் அழகமர் நாயகியும் புறப்பாடாகி, நான்கு வீதிகளை வலம் வந்து, கிழக்கு திக்கில்/ அருகேயுள்ள 'ஒன்பத்து வேலி'க்குச் சென்று மண்டகப்படிகளை ஏற்றுக் கொண்டு தேவார இன்னிசை ஒலிக்க மங்கள வாத்தியங்களோடு காவிரியாற்றுக்கு வந்து சேருகிறார். மறுநாட் காலை வாண வேடிக்கைகள் முடிந்த பிறகு, இறைவனும் இறைவியும் திருக்கோயில் திரும்புகின்றனர்.

மாசி மாதம் மக நாளில் சுவாமி இவ்வூருக்கு வடக்கே மூன்று மைல் தொலைவிலிருக்கும் 'நாகாச்சி' என்ற கிராமத்திற்குச் சென்று அவ்வூர் ஐயனார் கோயில் திடலில் அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் தங்கிவிட்டு மறுநாள் வருகிறார். நாகர் என்ற சிற்றரசன் கொள்ளிடத்தின் ஓடத் துறையை ஆட்சி செய்து வந்ததாகவும், அதனால் இவ்வூர் 'நாகர் ஆட்சி' என்று வழங்கப் பெற்று, பின்னர் 'நாகாச்சி' என்று மருவியது. இப்பகுதி மக்கள், அழகாம்பிகையின் சிலையொன்று செய்து கோயிலுக்கு அளித்ததால், நாகாச்சி, அம்மனின் பிறந்த வீடாகக் கருதப்படுகிறது. அதனால் பெண்ணுக்குரிய சீதனப் பொருள்களும் அனுப்பி வைக்கப்படுகின்றன. மறுநாள்சுவாமி நாகாச்சியிலிருந்து திருக்காட்டுப்பள்ளிக்குத் திரும்பும்போது கட்டுச்சாதக் கூடையுடன் அனுப்பி வைக்கப்படுகிறார்.

திருக்காட்டுப்பள்ளியில் சக்தியும் பெருமையும் வாய்ந்த தண்டாயுதபாணிக் கோயில் உள்ளது .

திருக்காட்டுப் பள்ளியில் வெகு விமரிசையாக நடை பெறும் பங்குனி உத்தர விழாவில் தண்டாயுதபாணி கோயிலுக்கும் சிறப்பான பங்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

– சௌமியா சுப்ரமணியன்
பழைய பல்லாவரம், போன்: 9940460969




## மாமியார் மருமகள் இடையே அன்பை வளர்க்கும்

# 27-வது சக்தி பீடம் மணிவேதிக்

ராஜஸ்தான் மாநிலத்தில் புஷ்கரில் ஓம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி புருஷோத்த மணிவேதிக் 27வது சக்தி பீடம், அன்னை பராசக்திக்கு 52 சக்தி பீடங்கள் பாரத புண்ணிய பூமியில் இருக்கின்றன. அன்னை பார்வதி தாக்ஷாயணி என்ற பெயருடன் தக்ஷனின் மகளாக தோன்றினாள். தக்ஷின் யாகம் ஒன்று செய்கையில் ஈசனையும் தன் மகளும் ஈசனின் மனைவிமான தாக்ஷாயணியை அவமதித்தான். அதனால் மனமுடைந்த தாக்ஷயாணி தக்ஷன் வளர்த்த யாகத்தில் விழுந்து உயிரை விட்டாள்.

சினம் கொண்ட ஈசனின் தாண்டவத்தால், உலக பிரளயம் ஏற்படாமல் இருக்க, மகாவிஷ்ணு தனது சுதர்சன சக்கரத்தால் அன்னையின் உடலை 52 பாகங்களாக பூமியில் சிதறி விழ செய்தார். அவ்வாறு விழுந்த 52 இடங்களும் சக்தி பீடங்களாகி அன்றிலிருந்து இன்று வரையும் வழிபாட்டு ஸ்தலமாக இருந்து வருகின்றன. அந்த புனித ஸ்தலங்களை சக்தி மண்டலங்களாக ஏற்படுத்தி அங்கு வரும் பக்தர்களுக்கு அளவு கடந்த சக்தியை வழங்கி அருள் புரிகிறாள் அன்னை பராசக்தி, புஷ்கரில் அமைந்துள்ளது 27 வது சக்தி பீடமாகும்.

அன்னையின் உடல் சிதறி விழுகையில் அன்னையின் மணிக்கட்டுகள் புஷ்கரில் விழுந்தன. நாம் கைகளால் வேலை செய்யும் பொழுது கைகள் செய்யும் எல்லா காரியங்களும் மணிக்கட்டுகள் வழியாகத்தான் இயக்கப்படுகின்றன, அங்கு அன்னையை வழிபடுகையில், தமது கரங்களுக்கு முக்கியமாக மணிக்கட்டுகளுக்கு அன்னை அபரிவிதமான சக்தியை வழங்குபவள் என்பது இதிலிருந்து புலப்படுகிறது.

கருவறையில் பார்வதியை அணைத்தபடி அமர்ந்துள்ள சிவனின் விக்கிரகத்தை விசேஷ நாட்களில் மற்றும் விசேஷ காலங்களில் காணலாம். கருவறையின் இடது கோடியில் அன்னை காளியின் சிலையும் வலது கோடியில் கௌரி விநாயகரை காணலாம். இந்த சிலைகள் (விக்கிரகங்கள்) மிகவும் புராதானமானவைகள். திரேதாயுக காலத்தை சார்ந்தவை. அளவு கடந்த











விசேஷ சக்தியை கொண்டவை. அதி விஷேச சக்தியை கொடுப்பவை. ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் விசேஷ பூஜைகள் நடத்தப்படுகின்றன.

இதனால் இத்தலத்தின் பவித்ரத்துவம் மற்றும் தெய்வீக சக்தி அதிகரிக்கப்பட்டுவழி படும்பக்தர்களுக்கும் அந்த சக்தியை வழங்கி அருள் புரிகிறாள் அன்னை சாமுண்டி. இந்த ஷேத்திரம்புஷ்கர் மலைகளுக்கு இடையில் அமைந்துள் ளது.

புஷ்கரிலிருந்து வருபவர்களுக்கு ஆட்டோ வசதியும் உள்ளது. இந்த கோயிலின் சக்தி தெய்வீகமானது. கோயில் பூசாரியிடம் அனுமதி பெற்று விசேஷ பூஜையில் கலந்துகொண்டு அன்னை சாமுண்டின் ஆசியை பெறலாம். தெய்வீக சக்தியும் பக்தி நிறைந்த அமைதியும் அலைகளாக உடலில் பாய்வதை நாம் இத்தலத்தில் உணரலாம். இந்த பீடத்தில் ஈசனின் நினைப்பில் பார்வதி அமைந்த வண்ணம் சிலை வடிவமைக்கப்பட்டமையால் இதை பிரிய பீடம் என்று வணங்கி வழிபடுகின்றனர்.

முக்கியமாக திருமணமான இளம் தம்பதியினர் இங்கு வந்து வழிபட்டால் ஒற்றுமையுடன் வாழ்வார்கள். இந்தக் கோவிலில் லட்சுமியும் சரஸ்வதியும் ரிஷப வாகனத்தில் அமர்ந்திருப்பது

மிகவும் அரிதான அபூர்வமான காட்சி. சரஸ்வதி தேவி ஞானத்திற்கும் லட்சுமி தேவி செல்வத்திற்கும் அதிபதியான தேவதைகள் என்பது நாம் அறிந்ததே. இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்தபடி ஒரே காளை வாகனத்தில் அமர்ந்திருப்பதால் வழிபாடு செய்யும் மாமியார் மருமகள் இடையே அன்பு வளரும். இங்கு நந்தி பகவானே பைரவராக நம்பப்படுகிறார்.

**எப்படி செல்வது:** புஷ்கர் புகைவண்டி நிலையம் 5 கி.மீ. புஷ்கர் பிரம்மா கோவில் 3 கி.மீ.

**விசேஷ நாள்:** துர்கா பூஜை, நவராத்திரி

**கோவில் நேரம்:** காலை 6.30 முதல் மாலை 6.00 மணி வரை

**தொடர்புக்கு:** 9460214919


டெல்லி தியாகராஜன்

–டெல்லி தியாகராஜன்
9868423215



e-magazine aanmeegamalar.com

ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

**ஆன்மிகமலர்** மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD

eBook

DOWNLOAD

eBook DOWNLOAD

free

இதுவரை வெளிவந்த

**186** க்கும் மேற்பட்ட

இதழ்களை




**aanmeegamalar.com**

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.

# பக்தர்களின் குறைகளை தனது நயனத்தினாலேயே தீர்க்கும் பெருமாள்



அர்ச்சாரூபராய் பார்முழுதும் அருள்புரிந்துவரும் திருவரங்கன் திருமால்பாடி என்னுமிடத்தில் குளிர்ந்த ஏரிக்கரையின் மீது அமைந்த குன்றில், அனந்த சயன கோலத்தில் அடியார்களின் குறைகளைந்திட அதியற்புதமாக அருளாட்சி நடத்துகின்றார்.

பள்ளி கொண்ட கோலத்தில் அந்த பரந்தாமன் இங்கு எழுந்தருள காரணம் என்ன என்பதனைக் காண்போமா?

ஸ்ரீ வேதவியாசரின் மகனான, கிளி முகம் கொண்ட சுகப்பிரம்ம ரிஷி இப்பகுதி யில் வரும்போது விரஜாபுரி என்னும் {ஸ்ரீவைகுண்டத்தில் பிரவாகிக்கும் புண்ணிய நதியின் பெயர் விரஜை} திருமால்பாடி குன்றின்மீது திருமாலை நோக்கி தவமிருந்தார். தவத்திற்கு இரங்கிய திருமால் தேவர்களுடன் கூடிய அரங்கநாதனாக தரிசனம் தந்து, வேண்டிய வரம் கேட்டார். சுகர் தனக்கு முக்திபேறு வேண்டினார். அதற்கு அரங்கநாதரோ... அருகில் உள்ள தீர்க்காசலம் என்னும் நெடுமலையில் தவம் புரியும்படியும், இராம அவதாரத்தின் போது இளவல் லட்சுமணன், அன்னை சீதாபிராட்டி மற்றும் அனுமன் புடைசூழ








e-magazine
aanmeegamalar.com

காட்சி தந்து முத்திப்பேறு தருவதாக வாக்களித்து மறைந்தார்.

அதன்படி இக்குன்றில் தவத்தை முடித்து, அரங்கனின் கட்டளைப்படி நெடுமலையை அடைந்து, அங்கு மீண்டும் திருமாலைக் குறித்து தவமிருந்தார். பின்னர் ஸ்ரீ இராமச்சந்திர பிரபு வைக் கண்டு, வணங்கி, முக்தி நிலையை எய்தி னார் சுகப்பிரம்ம ரிஷி.



இந்த புராண பின்னணியை மனதில் கொண்டு கி.பி.1136 ஆம் ஆண்டு பராந்தகசோழனின் மகன் விக்கிரம சோழனால் இக்குன்றில் அரங்க நாதருக்கு ஆலயம் எழுப்பப்பட்டது.

அதுமுதல் அடியார்களின் குறைகளை நீக்கி அற்புதமாக அருள்பாலித்து வருகின்றார் ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பெருமாள்.

குளிர்ந்த ஏரி நீரில் பட்டு வீசும் தென்றலும், பூஞ்சோலைகளும் பசுமையான வயல்வெளிகளும் சூழ... அற்புதமான சிறு குன்றின் மீது கோவில் கொண்டுள்ளார் ஸ்ரீ ரங்கநாத பெருமாள். 108 திவ்ய தேசங்களை நினைவூட்டும் 108 படிகள் கடந்து மேலே செல்ல, முதலில் மேற்குப்புறமாக வசந்த மண்டபம் காணப்படுகின்றது.

அடுத்ததாக, மூன்று நிலைகளும் ஏழு கலசங்களும் கொண்ட இராஜகோபுரம் நம்மை வரவேற்கிறது. முன் மண்டபத்தின் இருபுறமும் கருங்கல் திண்ணைகள். உள்ளே.... மகா மண்டபத்தில் நேராக தென் திசையை பார்த்தபடி ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் தரிசனமளிக்கின் றார்.

சற்று இடதுபுறம் திரும்பிட.... ஸ்ரீ ரங்க நாயகி தாயார் அலங்கார ரூபத்தில், சர்வ மங்களங் களையும் அருளும் கடாக்ஷியாக, திருவருள் பொழிகின்றாள். அருகில் ஸ்ரீ நரசிம்மரது தரிசனம்.

மகாமண்டபம் கடந்து, பெரிய அந்தராளத்தை அடைந்து, எழில் சுரக்கும் ஸ்ரீரங்கநாதப் பெருமாளை கண்குளிரக் கண்டு வணங்குகின்றோம். 15 அடி நீளமுள்ள ஐந்து தலைகள் கொண்ட ஆதி சேஷன்மீது மரக்காலை தலைக்குவைத்த படி, அனந்த சயனத்தில் பெருமாள் படுத் திருக்க... தலைமாட்டில் ஸ்ரீதேவியும், கால் மாட்டில் பூதேவியும் அமர்ந்து, அரங்கனுக்கு சேவை புரிந்திட, திருப் பாதங்களின் அருகே பிரகலாதனும், சுகபிரம்ம ரிஷியும் தவம் கிடக்க... பரந்தாமனின் திருமுகமோ பக்தர்களை பார்த்தபடியிருக்க...

இந்த பூலோக வைகுண்டத்தின் அழகு, அடடா... அடடா... வார்த்தைகளால் வர்ணிக்க முடியவில்லை. நேரில் வந்து தரிசித்தால்தான் இந்த பேரானந்தம் புரியவரும்.

தலைக்கு கீழே இரண்டு விரல்களையும் உள்ளே மடக்கி, மூன்று விரல்களை வெளியில் காட்டியபடி, யான் மூவுலகங்களையும் அளந்தவன் என சுட்டிக் காட்டுகின்றார். இவரது பார்வையோ, பக்தர்களைப் பார்க்கும்வண்ணம் உள்ளது வெகு விசேடமாகும். பக்தர்களின் குறைகளை தனது நயனத்தினாலேயே தீர்த்தருளும் திறத்தை





நிரூபிக்கிறார்.

இவருக்கு முன்னே... உற்சவ மூர்த்தங்களாக ஸ்ரீதேவி, பூதேவியுடனான சங்கு சக்கரம் ஏந்திய ஸ்ரீமஹாவிஷ்ணு சேவை சாதிக்கின்றார்.

அரங்கனின் அதியற்புத தரிசனம் முடித்து, ஆலய வலம் வருகையில் ஆண்டாளை தரிசிக்கின்றோம். சன்னதிக்கு வெளியே தனியாக சன்னதி கொண்டு, அரங்கனை பார்த்து கூப்பிய கரங்களோடு, நின்றபடி இருக்கும் பெரிய திருவடியான கருடாழ்வாரையும் தரிசிக்கின்றோம்.

வடக்குப் புறமாக சிறுவாயில் ஒன்று உள்ளது. அதில் சில படிகள் வழியாக கீழே இறங்கிட... சுனை வடிவில் உள்ள தல தீர்த்தமான நாரத தீர்த்தத்தைக் காண்கின்றோம். பாறை மீது நின்றபடி கீழேயுள்ள ஏரியையும், சுற்றியுள்ள இயற்கை அழகையும் கண்டு பெருமகிழ்ச்சியும், புத்துணர்ச்சியும் அடைகின்றோம். வானர கூட்டங்கள் இங்கு பெருமளவில் காணப்படுகின்றன. இங்கு சொர்க்கவாசலும் அமைந்துள்ளது.

இங்கு சோழர் காலக் கல்வெட்டுகள் பெருமளவில் காணப்படுகின்றன. கி.பி.1140 இல் முதலாம் குலோத்துங்கன், கி.பி. 1135 இல் சகலலோகச் சக்கரவர்த்தி இராஜநாராயண சம்புவராயர், கி.பி. 1529 இல் வீரசிங்கதேவரின் மகனான அச்சுத தேவமகாராயர் ஆகியோரால் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வைகுண்ட ஏகாதசி உள் ளிட்ட அநேக வைஷ்ணவ சம்பிரதாயங் களும் இங்கு விசேடமாக அனுசரிக் கப்படுகின்றன.

திருமண பாக்கியம் மற்றும் குழந் தைப்பேறு வேண்டுவோர் இங்கு அரங்கனுக்குத் திருமஞ்சனம் செய்




மோ.கணேஷ்

வித்து, நற்பலன் அடைகின்றனர்.

அரசு வேலை மற்றும் வேலையில் இடமாற்றம் வேண்டுவோர் பலர் இங்கு வழிபட்டு பலன் அடைந்துள்ளனர். அயல்நாட்டு வேலை வாய்ப்பும் இவ்வரங்கனின் அருளால் பலருக்கும் கிடைத் துள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டத்தில் உள்ள இந்த திருமால்பாடி திருத் தலம், செஞ்சி சேத்பட் பேருந்து சாலையில் உள்ள வளத்தியில் இருந்து தேசூர் செல்லும் வழியில் அருந்தோடு கிராமத்திற்கு அருகே அமைந்துள்ளது.

ஒரு முறை வந்து அரங்கனை கண்டு, சேவித்து, அளவில்லா ஆனந்தம் அடைவோம். நம் அருவி னைகள் களைந்து, ஆனந்தம் பெறு வோம்.

ஆலய தொடர்புக்கு:
திருமால்பாடி சக்கரவர்த்தி பட்டர்
9865454998

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்புக்கு: 9789156179.

e-magazine
aanmeegamalar.com




# Aanmeega Malar

## English magazine

Read on to find out amazing spiritual information

**covering all spiritual information**

For more details
9444228203
(9 AM to 4 PM)

Those who want to send spiritual messages please send them along with their photo and phone number

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
சார்பில் வெளியிடும்


சிறப்பு மலர்

# அருள்தரும் அற்புத ஆலயங்கள்



## சிவஸ்தலங்களும் அற்புதங்களும்

பரிகாரங்களும் பலன்களும்
ஆயுள் தரும் கோவில்கள்
முக்கிய முருகன் கோவில்கள்





பழனி முருகனும் நடுப்பழனியும்
திருவண்ணாமலை தீப
தரிசன சிறப்புகள்
பிடித்துவைத்த
பிள்ளையார் பலன்கள்

விரைவில்...
உங்கள் கைகளில்

ஆன்மிக அன்பர்கள் இதழ் குறித்த
தகவலை பெற தொடர்பு கொள்ளவும்

Ph:9994323622 / 9994162182 9444228203

# நொய்டா கோவிலில் தனுர் மாத பூஜைகள்

e-magazine
aanmeegamalar.com






எஸ்.வெங்கடேசன்

வேதிக் பிரச்சார் சன்ஸ்தான் (விபிஎஸ்) நொய்டா, ஒவ்வொரு ஆண்டும் போலவே, இந்த ஆண்டும், தனுர் மாத பூஜைகளை ஏற்பாடு செய்திருந்தது. விபிஎஸ் மூலம் நிர்வகிக்கப்படும் செக்டார் 22ல் உள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோயில், மற்றும் ஸ்ரீ விநாயகா

ஸ்ரீ கார்த்திகேயா கோவில், பிரிவு 62, நொய்டா, இவ்விரு கோவில் களிலும் தொடர்ந்து தினமும் நடைபெற்றன. தினசரி ருத்ரா

அபிஷேகம், ஸ்ரீ ராமர் பரிவாரத் திற்கு விசேஷ அலங்காரம் செய்யப் பட்டன.

இந்தியா முழுவதும் உள்ள பிரபலமான தென்னிந்திய கோவில்களில் நடைபெறும் அதே வரிசையில் அனைத்து பூஜைகளும் நடைபெற்றன. இப்பூஜைகள், அபிஷேகம், அனைத்தும், ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீராமின் தலைமையில் கோவிலின் வாத்தியார்கள் : ஸ்ரீ மணிகண்டன் சர்மா, ஸ்ரீ மோஹித் மிஸ்ரா, ஸ்ரீ



ஜெகதீசன், ராஜாராம், மற்றும் ஸ்ரீ விஷ்வேஸ்வர், ஆகியோரால் நடத்தப்பட்டது. பக்தர்களுக்கு காலையில் பிரசாதமாக ‘பஞ்சாம்ருதம், வெண் பொங்கல்’ விநியோகப்பட்டது. இந்த ஆண்டு தனுர் மாத பூஜைகள் ‘திங்களில் ஆரம்பித்து, திங்களிலேயே முடிவடைந்தது’, என்பது குறிப்பிடத்தக்கது.

கோயில் நிர்வாகம், கடும் குளிர் / மூடுபனியையும் பொருட்படுத்தாமல், அனைத்து பூஜைகளிலும் பங்கேற்ற பக்தர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு அல்லாமல், பூஜைகளை சிறப்பாக நடைபெறுவதை உறுதி செய்ய, தினமும் கோவிலுக்கு வருகை தந்த உறுப்பினர்களான : ஏ.பாலாஜி, ராஜு ஐயர், ராஜேந்திரன், ஸ்வாமி நாதன், ராதாகிருஷ்ணன், ஸ்ரீமதி ஜானகி, ஸ்ரீமதி ரேணுகா சிவராமன், ஸ்ரீமதி புவனா ராதா கிருஷ்ணன், மற்றும் பலரையும் பாராட்டினர்.

– எஸ்.வெங்கடேசன்,
நொய்டா
தொடர்பு எண்: 9811161370

## சிறு துளிகள்

❍ பிருங்கி முனிவர் வண்டு வடிவெடுத்து சிவ பெருமானை வழிபட்டதால் சிவ லிங்கத்தில் வண்டு துளைத்த அடையாளம் ஏற்பட்டது. இந்த அரிய வடிவினை நாம் திருநல்லூரில் காணலாம். இங்கு இறைவன் பஞ் சவர்ணேஸ்வரர் என்ற திரு நாமத்துடன் அருள்பாலிக்கிறார்.

❍ ஆலகால நஞ்சை உண்ட சிவபெருமான் அம்பிகையின் மடியில் சயனித்திருக்கும் அரிய காட்சியை காசியில் உள்ள “அனுமன் காட்டில் காமகோடீஸ்வரர் கோயிலில் காணலாம். ஆந்திர மாநிலம் சுருட்டப்பள்ளியிலும் பள்ளி கொண்டீஸ்வரர் தரிசனம் கிடைக்கிறது.

❍ மயிலாடுதுறை அருகே திருவிற்குடியில் உற்சவமூர்த்தியான சிவபெருமான் திபருக்கரத்தில் சக்கரம் ஏந்தி நிற்கும் காட்சியைக் காணலாம். வலது மேல் கரத்தில், மழுவும், இடது மேல் கரத்தில் மானும் வைத்திருக்கின்றார். இங்கு சிவனுக்கு துளசியால் அர்ச்சனை செய்கின்றனர்.

❍ அர்ஜுனனின் அம்புபட்ட லிங்கத்தை திருவிஜயமங்கையில் தரிசிக்கலாம். இங்கு இறைவன் விஜயநாதேஸ்வரர் என்ற திருநாமத்துடன் அருள்பாலிக்கிறார்.

❍ செம்பனார்கோயிலில் உள்ள சிவபெருமான் சொர்ணபுரீஸ்வரர் என்ற பெயருடன் 32 இதழ்களை உடைய தாமரை வடிவ ஆவுடையாரில் சுயம்பு லிங்கமாக எழுந்தருளியிருக்கிறார்.

# மனிதன் தேவையை உணரும்போது பக்தி தோன்றுகிறது

சீடன்: பக்தி ஏன் எங்களுக்கு வருவதில்லை?

ஞானி: தேகாபிமானம் என்பதே பற்று. சரீரத்தில் பற்று வைத்துக் கொண்டிருப்பவன் அன்பை, பண்பை, பக்தியை உணரமாட்டான். அதனால் விளங்க முடிவதில்லை.

சீடன்: இறைவன் மனிதனிடம் என்ன எதிப்பார்க்கிறான்?

ஞானி: மனிதன் உலகில் வாழும்போதே முழுமை அடைந்தால்முக்தி எனப்பெயர். வாழும்போதே உன் உயிரை என்னிடம் தா என்கிறான் கடவுள்.

சீடன்: மனம் இதற்கு ஒத்துழைக்க மறுக்கிறதே?

ஞானி: மனதை அடித்தால் தான் கடவுளும், நாமும் ஒன்று என்ற நிலை ஏற்படும். மனதை அடிக்காதவர்கள் வெளி உலகில் அடிபடுவார்கள்.

சீடன்: உலகில் கடவுள் எப்படி செயல்படுகிறான்?

ஞானி: கடவுள் உலகத்தில் புகுந்தால் கதைகள், புராணங்கள் உண்டாகும். மனிதனுள் புகுந்தால் மனிதனுக்கு ஞானம் பிறக்கும். பொருட்களில் புகுந்தால் சித்தர்கள் மத்தியில் சித்து விளையும்.

சீடன்: இதில் எனக்கு எப்பொழுது முழு நம்பிக்கை பிறக்கும்?

ஞானி: இறைவனின் கருணை பிறந்தால் தான் நம்பிக்கை முழுமை அடையும்.

சீடன்: இதன் விளைவு என்ன?

ஞானி: பகவானை எண்ணிஇருக்கும்போது உள்ளத்தில் ஞானவேள்வி நடக்கிறது. அப்பொழுது தீமைகள் அகன்று நன்மைகள் உற்பத்தியாகி கடவுள் பிரசன்னமாகிறான்.

சீடன்: இந்த எண்ணங்களெல்லாம் சாஸ்திரங்களில் உள்ளதா?

ஞானி: இருக்கும். ஆனால் எழுதின வண்ணம் படிக்கவில்லை என்றால் நியாயமாக படிக்கவில்லை, புரிந்து கொள்ளவில்லை என்று பொருள்.

சீடன்: பல கடவுள் இருப்பதால் குழப்பத்தை உண்டு பண்ணாதா?

ஞானி: தெய்வ பேதங்கள் இல்லாமல் இருந்தால் தான் கடவுளைப் பற்றி சமசித்தம் இருக்கும். இதற்கு சமயத்தைப் பற்றிய உண்மையான ஞானம் குருமுகமாக கிட்டவேண்டும். அவர்களே அப்பியாசத்தில் நுழைகின்றனர். அனுபவ சித்தாந்தம் தான் பக்தி, ஞானம், கடவுள் எல்லாம்.

சீடன்: நவராத்திரி என்பது அவ்வளவு முக்கியமா?

ஞானி: ஆமாம். நவரசம் என்பது மனித வாழ்க்கையில் எப்படி முக்கியமாக உள்ளதோ, அது போல் நவராத்திரி தெய்வீக வாழ்க்கைக்கு முக்கியம்.

சீடன்: இது சம்பிரதாயமல்லவா?

ஞானி: பகவத் சம்பிரதாயத்தை பின்பற்றினால் மன ஆரோக்கியம் ஏற்படும். மனம் ஆரோக்கியப்பட்டால் தான் சிவபெருமான் மாற்றுப் பாதையை தருகிறான்.

சீடன்: நவராத்திரி விரதம் என்று எதையாவது பிடித்துக் கொள்ள வேண்டுமா?

ஞானி: எதையாவது விட்டால் தான் விரதம். ஞானம் என்ற பேரறிவை விட, சந்தேகத்தை விடு.



சீடன்: வளரும் மனிதன் எப்படி இருக்க வேண்டும்?


ஞானி: பேசாமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளதே என்று எண்ணுபவனே வளரும் மனிதன்.

சீடன்:துன்பங்கள் ஏன் பிறந்தன?

ஞானி: ஆன்மீக இறக்கைகள் வளராததால்.

சீடன்: பூஜைகளை நிறுத்தலாமா?

ஞானி:பயம் போய்விட்டால் நிறுத்து.




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

**ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.**

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

e-magazine
aanmeegamalar.com


சீடன்: தொண்டன் என்றால் என்ன?
ஞானி: பிறருக்காக வாழ்வது.
சீடன்: வீரம் என்றால் என்ன?
ஞானி: யாரையும் எதையும் யாசிக்காத நிலை.
சீடன்: ஞானஸ்நானம் என்றால் என்ன?
ஞானி: நமக்கு தேவையானது எது என்று தெரியும் நேரம்.
சீடன்: உண்மையான மதவாதிகள் ஏன் இல்லை?
ஞானி: பிரச்சினைகளில் கௌரவம் குறுக்கிடுவதை அனுமதிப்பதால்.
சீடன்: மனிதத் தன்மை என்றால் என்ன?
ஞானி: எதிலும் நோக்கம் அதிகமாக இருப்பது.
சீடன்: தொண்டர்கள் என்பவர்கள் யார்?
ஞானி: கடமையைச் செய்தவர்கள்.
சீடன்: தொண்டில் சிறந்தது எது?
ஞானி: வழி காட்டியாகச் செய்யும் தொண்டு.
சீடன்: மனிதன் பக்தியைக் கொள்வது எப்போது?
ஞானி: தேவை என உணரும்போது.
சீடன்: இறையுணர்வு எப்பொழுது வரும்?
ஞானி: அது இயக்கமாக தானாக வளர வேண்டிய ஒன்று.
சீடன்: அதற்கு செய்ய வேண்டியது என்ன?
ஞானி: முதலில் ஒரு வழிகாட்ட குருவைத் தேடு,
சீடன்: சிந்தனையாளன் என்பவன் யார்?
ஞானி: சார்புடைய எண்ணங்களுக்கு கட்டுப்படாதவன்.
சீடன்: ஒழுக்கம் என்றால் என்ன?
ஞானி: முதலில் உன்னைத் தெரிந்து கொள்வது.
சீடன்: பக்தி மார்க்கம் எப்பொழுது தெரியும்?
ஞானி: மனம் சிரிக்கும் போது.
சீடன்: நல்ல மனிதன் யார்?
ஞானி: உள்நோக்கம் இல்லாதவன்.
சீடன்: இறைவன் மனிதனிடம் எதிர்பார்ப்பது என்ன?
ஞானி: கடவுள் மனிதர்களிடம் மொத்த அபிப்பிராயத்தையோ தனிப்பட்ட அபிப்பிரயாங்களையோ எதிர்ப்பார்ப்பதில்லை.
சீடன்: மதங்கள் ஏன் தோன்றின?
ஞானி: தெய்வம் எதற்காக என்று புரிவதற்கு.
சீடன்: ஆசாரம் என்றால் என்ன?
ஞானி: கொள்கையைக் கடைப்பிடிக்கும் தன்மை.
சீடன்: முடிவு எடுப்பது எப்படி?
ஞானி: படிப்பதற்கு முன்னால் முடிவு செய்யாதே. படித்து அறிந்து முடிவு எடுப்பவன் பாதியில் ஓடிவிடுவான்.

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028
அழகுராஜா


ஆன்மிகமலர் .காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# ஐதராபாத்தில் அஷ்டலஷ்மி கோவில்





தெலுங்கானாவின் தலைநகரமான ஐதராபாத் ராமகிருஷ்ணபுரம், வாசவி நகரில், எண் 52, 55ல் அமைந்துள்ளது ஸ்ரீ அஷ்டலஷ்மி கோவில். வாசவி நகரில் வசிக்கும் அன்பர்கள் அனைவரும் விரும்பியபடியே ஐதராபாத் நகரின் அடையாளமாக ஆதிநாராயணரும், அஷ்டலஷ்மிகளும், அபய கணபதியும் இங்கு அருள்பாலிக்கிறார்கள்.

1991ம் வருடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளால் பூமி பூஜை நடத்தி, கோவில் திருப்பணி தொடங்கி, 1996ம் வருடம்,

ஸ்ரீ சின்ன ஜீயர் சுவாமிகளால் மகா கும்பாபிஷேகம் நடைப்பெற்றது. காஞ்சிபுரம் திரு. சுப்பையா அவர்களால் தேர்வு செய்யப்பட்டு, திரு.கணபதி ஸ்தபதியால் தெய்வ திருமூர்த்தங்கள் வடிக்கப்பட்டதாம்.

அழகிய இராஜகோபுரத்தை கடந்ததும், பெரிய பிராகரத்தின் ஒரு பக்கம் அமைந்துள்ள தீப அலங்கார மண்டபத்தில் வெள்ளி கிழமைகளில் சகஸ்ர தீப சேவா ஊஞ்சல் உற்சவம் நடைபெறுகிறது. இரண்டு பக்க சுவர்களில், ஒரு புறம் ஸ்ரீனிவாச பத்மாவதி திருக்கல்யாணமும், மறுபுறம் பாற்கடல் பள்ளிக்கொண்ட திருநாரயணரும், லஷ்மி தேவியும், தேவாதி தேவர்களும் அழகிய வண்ண ஓவியங்களாக வரையப்பட்டுள்ளது. பெரிய படிகள் ஏறி, (லிப்ட் வசதியும் உண்டு) முதல் தளத்தை அடைந்தால் மிகப்பெரிய பிரம்மாண்டமான "அபய கணபதி" தரிசனம் அளிக்கிறார். வெள்ளை வெளேர் என பளிங்கு போல் மின்னும் திருக்கோவில், தங்க கலசம், ஸ்ரீசக்கர கோபுரம், நெடிதுயர்ந்த தங்க தகடு வேய்ந்த துவஜஸ்தம்பம், விளக்கொளியில் இக்கோவில் தேவ லோகமோ என எண்ண வைக்கிறது. அஷ்டலஷ்மிகளின் இருப்பிடமானதால், திருக்கோவில் மிக சுத்தம். துவஜஸ்தம்பம் வணங்கி, பெரிய திருவடியாம் கருடரை வணங்கி, கர்ப்பகிரகத்தில் நுழைகிறோம். நடுநாயகமாக





உள்ள திருசன்னதியில் ஆதிநாரயணர் சங்கு, சக்கரம், அபய, வரத அஸ்தங்களுடன், ஆதில ஷ்மி சமேதராக அருள்கிறார்.

உற்சவ மூர்த்தங்களும், சக்கரத்தாழ்வாரையும் தரிசிக்கிறோம். இங்கு குங்கும அர்ச்சனை செய்து, தீர்த்த பிரசாதம், ஸ்ரீசடாரி, குங்குமம் பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது. பிரதட்சணமாக உட்பிராகரம் வலம் வரும் போது, முதலில் ஆழ்வார், ஆச்சாரியர்களை வணங்கியதும், முதல் சன்னதியில் ஸ்ரீ சந்தான லஷ்மியின் தரிசனம். செல்வத்தில் உயர்ந்த செல்வம் மழலை செல்வம் அதனால் முதலில் சந்தான லஷ்மியின் அருள். அடுத்து ஸ்ரீ கஜ லஷ்மி, ஸ்ரீ தன லஷ்மி, ஸ்ரீ தான்ய லஷ்மி, ஸ்ரீ விஜய லஷ்மி, ஸ்ரீ ஐஸ்வர்ய லஷ்மி, ஸ்ரீ வீர லஷ்மி என தாயார்கள் தனி, தனி சன்னதிகளில் அருள்கிறார்கள்.

சந்தான லஷ்மி சன்னதிக்கும், கஜ லஷ்மி சன்னதிக்கும் நடுவில் உள்ள வண்ண கண்ணாடி அறையில் ஊஞ்சலில், ஆதிசேஷன் மீது ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக ஆதிநாராயணரும், ஸ்ரீலஷ்மி, ஸ்ரீஆண்டாள் உற்சவ மூர்த்தங்களையும் தரிசிக்கி றோம்.

இருபுறமும் வண்ண கண்ணாடி பதித்த கருடர், ஆஞ்சநேயர் வடிவங்கள். தங்க, வைர நகைகளுடன், பட்டு புடவையில் வண்ண மலர் மாலைகளுடன், திவ்ய அலங்காரத்தில் அஷ்ட லஷ்மிகளையும் தரிசிப்பது மனதிற்கு அமைதியும், ஆனந்தமும் அளிக்கிறது.

வெளி பிராகர சுற்றில் உள்ள பூச்செடிகளும் நந்தவனமும் கண்ணுக்கு குளுமை. ஸ்தல விருட்சம் வலம் வந்து, விமான நாராயணரை வணங்கி, அமர்ந்து தியானம் செய்ய இடம் உள்ளது. வடக்குபுறம் பரம்பத வாசல் கோபுரம் உள்ளது. உற்சவ மண்டபத்தில், திருக்கல்யாண உற்சவம், உபன்யாசம் என நடைபெறுகிறது. அழகான தங்கதேரும் உள்ளது. வருகும் பக்தர்கள் அனைவருக்கும் எப்போதும் சுவையான அன்னபிராசதம் கிடைக்கிறது. அன்னதானத்தில்



பங்குபெற விரும்பும் அன்பர்கள் குறைந்த பட்சம் ரூபாய் ஐம்பது செலுத்தி, ஒரு படி தரமான அரிசியை பெற்று தங்கள் கைகளால் அன்னதான உண்டியலில் சேர்க்கலாம். பக்தர்கள் தங்கள் கோரிக்கைகள் நிறைவேற அஷ்ட லஷ்மிகளுக்கும் புடவை சாற்றி, வழிபடுகிறார்கள். தாயார்களுக்கு சாற்றிய புடவைகளை உரிய பணம் செலுத்தி, பக்தர்கள் பெற்றும் செல்கிறார்கள்.

இத்திருக்கோவிலில் பஞ்சாட்சர ஆகம முறைப்படி பூஜைகள் நடைபெறுகிறது. வரலஷ்மி விரதம், விநாயக சதுர்த்தி, கிருஷ்ண ஜெயந்தி நவராத்திரி, தீபாவளி, கார்த்திகை தீபம், மார்கழி உற்சவம் என அனைத்து பண்டிகைகளும் மிக விமர்சையாக நடக்கிறது. தினம், தினம் இங்கு விழாக்கோலம்தான்.

ஆதி லஷ்மி சமேத ஆதிநாராயணர் மற்றும் அஷ்டலஷ்மிகள் அருள் பெற அனைவரும் வாருங்கள் !!!

கோவில் திறக்கும் நேரம் காலை 6 முதல் 12 மணி வரை மாலை 5 முதல் 9 மணி வரை.

–சுபத்திரா ரங்கநாதன்
ஐதராபாத்.

e-magazine
aanmeegamalar.com

FREE

# ஆன்மிகமலர் .காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# 180 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை

பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...



eBook FREE DOWNLOAD

## aanmeegamalar.com



தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# திண்டுக்கல் உட்பட 3 இடங்களில் பக்தர்களுக்காக அன்னதான குடில்

தைப்பூசத்திற்கு விரதம்இருந்து பழநிக்கு பாதயாத்திரையாக செல்லும் பக்தர்களுக்காக ஒட்டன்சத்திரம் அருகே கே.எல்.மஹாலில் "பழநி முருகன் அன்னதான குடில்" அமைக்கப்படு கிறது.

இந்தக் குடில் உலகம் முழுவதுமுள்ள முருக பக்தர்களால் ஒன்றிணைந்து நடத்தப்படுகிறது.

திண்டுக்கல்லில் பிப்.7ம் தேதி இரவு சிற்றுண்டியும், ஒட்டன்சத்திரம் அருகே பிப்.8ம் தேதி மாலை முதல் 9ம் தேதி மாலை வரை அன்னதான விழா நடக்கிறது.

பிப.8ம் தேதி மாலை 5மணிக்கு குடிலுக்கு வரும் பாதயாத்திரை பக்தர்கள் பில்டர் காபியுடன் வரவேற்கப்படுகின்றனர்.

பின் குத்துவிளக்கேற்றி வழிபாடு பஜனை நடைபெறும்.

அதிக ஆண்டுகளாக பாத யாத்திரை வரும் பக்தர்களை தேர்ந்தெடுத்து கவுரவிக்கப் படுகி றார்கள்.

பிப் 9 காலையும் இரவும் சிற்றுண்டி வழங்கப்படுகிறது. மதி யம் தலைவாழையில் விரத சாப்பாடு வழங்கப்படுகிறது.

மருத்துவ முகாம் நடத்தப் படுகிறது. மருத்துவ உதவியும் மருந்துகளும் வழங்கபடுகிறது.

பழநி முருகன் அன்னதான குடில் அறக் கட்டளை சார்பில் 15வது ஆண்டாக நடக்கிறது.

பழநி பாதயாத்திரை பக்தர்களுக்கு அன்னதானம் அளிக்க விருப்பமுள்ள பகதர் களை ஒன்றிணைத்து ஆண்டுதோறும் சுற்றுச் சூழலையும் பாதுகாக்கும் வகையில் பெரியளவில் நடத்துவதே இந்த குடிலின் தாரக மந்திரம்.

வேடசந்தூர் அருகே

தஞ்சாவூர் திருச்சி மாவட்டங்களில் இருந்து வேடசந்தூர் வழியாக வரும் பழநி பாதயாத்திரை பக்தர்களுக்கு அன்னதானம் சில இடங்களில் வழங்கப்படுகிறது.

இந்த பாதையிலும் குடில் அமைக்க பக்தர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து வேடசந்தூர் அருகே அய்யனார் கோவிலை தாண்டியதும் சாலையூர் நால் ரோட்டில் பழனி முருகன் அன்னதான குடில் அமைக்கப்படுகிறது.

இங்கு பிப் 8 காலை 5 மணிக்கு காப்பியும் 7 மணிக்கு சிற்றுண்டி 1200 பேருக்கு மதியம் 800 பேருக்கு தலை வாழை இலையில் விரத சாப்பாடு வழங்கப்படுகிறது.

காலை 9 மணிக்கு குடிலில் அமைக்கப்படும் அலங்கார பந்தலில் வேல் அபிஷேகம் ஆராதனை





வேல் மாறல் பாராயணம் நடக்கிறது.

மூன்று இடங்களில் துணிப்பையில் வைத்து பக்தர்களுக்கு பிஸ்கட் பழங்கள் பாம்பின் ஸ் மிட்டாய் வழிபாட்டு பாடல்கள் அடங்கிய புத்தகம் வழங்கப்படுகிறது.

இதில் சேவையாற்றும் தொண்டர்கள் அனை வரும் சீருடை அணிந்து பணியாற்றுவது கண் கொள்ளா காட்சியாக இருக்கும்.

ஒட்டன்சத்திரம் குடிலில் இசை கச்சேரியும் நடக்க உள்ளது. இந்த குடிலில் சேவையாற்ற உதவிக்கரம் நீட்ட அழையுங்கள் 9944309719 9842198889.


சத்துமாவு
Sathu maavu
41 வகையான சிறுதானியங்களில் தயாரிக்கப்பட்டது
41
ingredients
Sathu maavu kanji
Multigrain Porridge is the most healthy breakfast. It is rich in minerals and has high fibre content that keeps blood sugar under control.
ingredients
Ragi, Samba wheat, Rye, White corn, Black gram, Green gram, Millet, Black cowni rice, Sorghum, Bamboo rice, White chickpeas Black chickpeas, Roasted groundnuts, White soybeans, Horsetail rice, Millet rice, Varaku rice, Samai rice, White Ellur, Black rice, White Awal Sukku, Cucumber seed, Pumpkin seed, Barley, Groom samba, Cashew nut, Almond nut, Walnut, Double beans, Maize, Cardamom, Red Rice, Pistachio Nut, Edible Rice, Biryani Rice, Red Soya Beans, Gatti Elephant Rice, Unity Rice, Darbis Seed Hindu Salt,
மேற்கண்ட அனைத்தும் நன்கு பதப்படுத்தி, மிகுந்த தரத்துடன் பக்கவிளைவுகளை தரும் கெமிக்கல் பயன்படுத்தாமல் வீட்டு பயன்பாட்டு முறையில் தயாரிக்கப்பட்டது.
மேலும் விபரங்களுக்கு
7550199561








# தஞ்சையில் உள்ள திவ்யதேசங்கள்

தஞ்சாவூரில் நீலமேகப்பெருமாள், மணிக்குன்ற பெருமாள், வீரநரசிம்மர் பெருமாள் கோயில்கள் சேர்ந்து ஒரு திவ்யதேசமாக இருக்கிறது. இந்தக் கோயில்கள் அருகருகே உள்ளன.

பராசர மகரிஷி மணிமுக்தா நதிக்கரையில் ஆஸ்ரமம் அமைத்து தவம் செய்து வந்தார். அந்த நதியில் தான் கொண்டு வந்த அமிர்தத்தைக் கலந்தார். அப்போது சிவனிடம் சாகா வரம் பெற்ற தஞ்சகன், தண்டகன், தாராசுரன் என்ற அசுரர்கள் அவரைத் தொந்தரவு செய்தனர்.



e-magazine
aanmeegamalar.com

பராசரர் அவர்களை எச்சரித்தார். அவர்களோ கேட்பதாக இல்லை. எனவே அவர்களை தண்டிக்கும்படி சிவனிடம் வேண்டினார். சிவன் காளிதேவியை அனுப்பி அசுரர்களை வதம் செய்தார். ஆனால், அசுரர்கள் மூவரும் அமிர்தம் கலந்த நதி நீரைப் பருகி, மீண்டும் மீண்டும் உயிர் பெற்று முனிவர்களை கொடுமைப்படுத்தினர்.

பராசரர் மகாவிஷ்ணுவிடம் வேண்டினார்.

மகாவிஷ்ணு அசுரர்களை அழிக்கச் சென்றார். அப்போது தஞ்சகன் யானை வடிவம் எடுக்கவே, விஷ்ணு அவனை அழிக்க நரசிம்ம அவதாரம் எடுத்து, தன் மடியில் கிடத்தி வயிற்றைக் கிழித்தார். அவரது ஸ்பரிசம் பட்டதும் தஞ்சகனுக்கு ஞானம் பிறந்தது.

அசுர குணங்கள் ஒழியப்பெற்ற அவன் மகாவிஷ்ணுவிடம், "எனக்காக நரசிம்மராக வந்த நீங்கள் இங்கேயே தங்கி மக்களுக்கும் அருள வேண்டும், எனது பெயராலேயே இத்தலமும் அழைக்கப்பட வேண்டும்" எனக் கேட்டான்.

அவரும் அருள்புரிந்தார். அவனது பெயரால் இத்தலம் 'தஞ்சமாபுரி' எனப்பட்டது. (பிற்காலத்தில் தஞ்சாவூர் ஆனது).

தஞ்சகனின் அழிவைக்கண்ட தண்டகன், பூமியை பிளந்து கொண்டு உள்ளே சென்றான். மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்து பூமிக்குள் சென்று அவனை அழித்தார். பின் காளியை அனுப்பி தாரகனை வதம் செய்தார். மூன்று அசுரர்களும் அழிக்கப்பட்ட பிறகு அவர் பராசரருக்கு நீலமேகப்பெருமாளாக காட்சி தந்தார். வீர நரசிம்மர், மணிக்குன்றப் பெருமாள் என்ற பெயர்களிலும் இங்கு அருள்பாலிக்கிறார். மூன்றுகோயில்களும் ஒரே வளாகத்தில் உள்ளன. ஒரே திவ்யதேசமாகப் போற்றப்படுகின்றன.

சக்கரத்தாழ்வாரான பெருமாள்:

வீரநரசிம்மர் கோயிலில் மகாவிஷ்ணுவே சக்கரத்தாழ்வாராக இருக்கிறார். வலப்புறத்தில் இருக்கும் யானையை தடவிக்கொடுத்தபடி இருக்க, இடப்புறத்தில் தஞ்சகாசுரன் சுவாமியை வணங்குவது போல சிலை அமைப்பு இருக்கிறது.

இவருக்கு பின்புறத்தில் நரசிம்மர் யோக பட்டையுடன் அமர்ந்த கோலத்தில் இருக்கிறார். அவருக்கு இருபுறமும் இரண்யன், பிரகலாதன் இருக்கின்றனர்.

வலவந்தை நரசிம்மர்:

நரசிம்மரின் இடதுபுறத்தில் அமர்ந்திருக்கும் மகாலட்சுமி, நீலமேகப்பெருமாள் கோயில் பிரகாரத்தில் அவருக்கு வலப்புறத்தில் இருக்கிறார்கள். இவரை 'வலவந்தை நரசிம்மர்' என்கின்றனர்.

அசுரனை அழித்த நரசிம்மர், இதயம் கோபத்தில் துடித்துக்கொண்டிருக்க இத்தலத்தில் அமர்ந்தார். கோபம் இருக்கும் இடத்தில் மகாலட்சுமி வாசம் செய்வதில்லை. எனவே அவள் நரசிம்மருக்கு வலப்புறத்தில் அமர்ந்துகொண்டாள். கோபம் கொண்டவர்களுக்கு லட்சுமி கடாட்சம் கிடைக்காது என்பதை இந்த வடிவம் நமக்கு உணர்த்துகிறது. அதிகமாக கோபப்படுபவர்கள் இவரை வணங்கி மன அமைதி பெறலாம்.

சிங்கப்பெருமாள் கோயிலில் வீர நரசிம்மர், முன் மண்டபத்தில் யோக நரசிம்மர், நீலமேகப் பெருமாள் கோயில் பிரகாரத்தில் லட்சுமி நரசிம்மர், கருடாழ்வார் விமானத்தில் அபயவரத நரசிம்மர், தாயார் சந்நதியில் உள்ள தூணில் கம்பத்தடி யோக நரசிம்மர் என இத்தலத்தில் பஞ்ச நரசிம்மர்கள் காட்சி தருகின்றனர்.

மூன்று மூலவர்களுக்கும் தைலக்காப்பு மட்டுமே செய்யப்படுகிறது. இத்தலத்து தாயார் செங்கமலவல்லி, தஞ்சைநாயகி, அம்புஜவல்லி என்ற பெயர்களால் அழைக்கப்படுகிங்ள்.

ஹயக்ரீவர்:

ஹயக்ரீவர் லட்சுமியுடன் இருக்கிறார். கல்விக்கு அதிபதியான ஹயக்ரீவர், செல்வத் திற்கு அதிபதியான லட்சுமிக்கு ஏலக்காய் மாலை சாத்தி, நெய்விளக்கு, கற்கண்டு படைத்து வணங்கிச்ல் கல்வி, செல்வம் செழிக்கும்.

திருவிழா: பங்குனி, சித்திரை, வைகாசியில் மூன்று பெருமாள்களுக்கும் பிரம்மோற்ஸவம் நடக்கிறது. வைகாசியில் 18 கருடசேவை திருவிழா விசேஷம்.

இருப்பிடம்: தஞ்சாவூர் பழைய பஸ் ஸ்டாண்டில் இருந்து கும்பகோணம் செல்லும் வழியில் 3 கி.மீ.,

நடை திறப்பு: வீரநரசிம்ம பெருமாள் கோயில் காலை 7–12 மணி, மாலை 5– 8.30 மணி. மற்ற இரண்டு கோயில்களுக்கு செல்ல இங்கிருந்து அர்ச்சகரை அழைத்துச் செல்லவேண்டும்.

போன்: 04362 223 384

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

FREE

# 176 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

**முற்றிலும் இலவசம்**
**எந்தவித மறைமுக கட்டணமும் இல்லை**

பாருங்கள்... டவுன்லோடு செய்து படியுங்கள்...



eBook FREE DOWNLOAD

## aanmeegamalar.com



தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com